
விலை: 50.00
பக்கங்கள் - 16
Website : www.valampurii.lk
Viber : 076 636 3378
Registered as a News Paper in Sri Lanka

# வலம்புரி
## Valampurii

E-mail: valampurii@yahoo.com

சங்கு 26
ஒலி 271 வள்ளுவர் ஆண்டு 2056 ஆவணி 31 செவ்வாய்க்கிழமை (16.09.2025) தொலைபேசி 222 3378, பக்ஸ் 222 7829

NORTHERN UNI
EXPERIMENT. EXPERIENCE. EXCEL
2025 ஆம் ஆண்டுக்கான பட்டப் படிப்புக்கள் ஆரம்பம்
BSc (Hons) in IT | BBA (Hons)
(C-3892)
OCTOBER INTAKE 2025
அனுமதிகளுக்கு அழைக்கவும்!
SLIIT NORTHERN UNI, 239 Arasadi Road, Kanthamadam Junction, Jaffna
021 7534 807




## தியாக தீபம் திலீபனின் நினைவேந்தல் ஆரம்பம்

(யாழ்ப்பாணம்)

இந்திய அரசிடம் ஐந்து அம்சக் கோரிக்கையை முன்வைத்து, 12 நாட்கள் உண்ணாநோன்பிருந்து உயிர்த் தியாகம் செய்த தியாகதீபம் திலீபனின் 38ஆவது ஆண்டு நினைவேந்தல் நல்லூரில் நேற்று ஆரம்பமானது.

நல்லூர்க் கந்தன் ஆலயம் அருகே அவர் உண்ணாவிரதம் இருந்த இடத்தில் அஞ்சலி நடைபெற்றது. அதைத் தொடர்ந்து நல்லூ

15ஆம் பக்கம் பார்க்க

## கொழும்பில் 11 இளைஞர்கள் காணாமல்போன வழக்கு

### மேன்முறையீட்டை விசாரிக்க நீதிமன்றம் உத்தரவு

(கொழும்பு)

கொழும்பில் 11 இளைஞர்கள் கடத்தப்பட்டு காணாமல் போனது தொடர்பாக தாக்கல் செய்யப்பட்ட வழக்கில் பிரதிவாதியாகப் பெயரிடப்பட்ட முன்னாள் கடற்படைத் தளபதி வசந்த கரன்னாகொடவை வழக்கில் இருந்து நீக்குவதற்கான சட்டமா அதிபரின் முடிவை இரத்துச் செய்யக்கோரி காணாமல்போன இளைஞர்களின் பெற்றோர்

15ஆம் பக்கம் பார்க்க

### சாவகச்சேரி நகர, பிரதேச சபை

## நீதிமன்றத் தீர்ப்பு அறிவிக்கப்படவில்லை

### தேர்தல்கள் ஆணையாளர் நாயகம்

(யாழ்ப்பாணம்)

சாவகச்சேரி நகரசபை மற்றும் பிரதேச சபை தொடர்பிலான நீதிமன்றத் தீர்ப்பு இதுவரை தேர்தல்கள் ஆணைக்குழுவுக்கு உத்தியோகபூர்வமாக அறிவிக்கப்படவில்லை.

15ஆம் பக்கம் பார்க்க

## மாகாண சபைத் தேர்தலை நடத்தத் தயாராக உள்ளோம்

### யாழில் தேர்தல்கள் ஆணையாளர் நாயகம்

(யாழ்ப்பாணம்)

மாகாண சபைத் தேர்தலை காலம் தாழ்த்தாமல் நடத்தத் தயாராகவுள்ளோம் என தேர்தல்கள் ஆணையாளர் நாயகம் சமன் ஸ்ரீ ரத்நாயக்க தெரிவித்துள்ளார்.




யாழ்ப்பாணத்தில் நேற்று நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பின்போதே மேற்கண்டவாறு தெரிவித்தார். அவர் தொடர்ந்து தெரிவிக்கையில்,

மாகாண சபைத் தேர்தல் காலம் தாழ்த்திச் சென்று கொண்டிருப்பது விருப்பு முறைமை வாக்களிப்பாக இருந்த மாகாண சபை முறைமையை விகிதாசார முறைமையாக்க தீர்மானம்

02ஆம் பக்கம் பார்க்க

## கௌசல்யா எம்.பியாகலாம்?

### சமன் ஸ்ரீ ரத்நாயக்க

(யாழ்ப்பாணம்)

நீதிமன்றத் தீர்ப்பின் பிரகாரம் இராமநாதன் அர்ச்சுனாவின் பாராளுமன்ற உறுப்புரிமை வெறிதாக்கப்பட்டால் அவரின் சுயேட்சைக்குழுவில் போட்டியிட்டு 2ஆம் நிலையில் வாக்குப் பெற்றவர் பாராளுமன்ற உறுப்பினராக வரலாம் எனத் தேர்தல் ஆணையாளர் நாயகம் சமன் ஸ்ரீரத்நாயக்க தெரிவித்துள்ளார்.

யாழ்ப்பாணத்தில் நேற்று

15ஆம் பக்கம் பார்க்க

## எதிர்க்கட்சியினரின் குரலை அடக்கும் செயற்பாட்டில் அநுர அரசாங்கம்



### எதிர்க்கட்சித் தலைவர் சஜித்

(அநுராதபுரம்)

எதிர்க்கட்சியினரின் குரலை அடக்கும் செயற்பாட்டை அநுர அரசாங்கம் முன்னெடுக்கின்றது என எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸ குற்றம் சுமத்தியுள்ளார்.

அநுராதபுரம் மதவாச்சியில் இடம்பெற்ற மக்கள் சந்திப்பிலேயே அவர் இதனைத்

04ஆம் பக்கம் பார்க்க

## கடந்த ஆட்சியாளர்களால் கைவிடப்பட்ட 17 திட்டங்களால்

### ரூ.29 பில்லியன் மேலதிக செலவு
### அமைச்சர் நளிந்த ஜயதிஸ்ஸ



(களுத்துறை)

கடந்தகால ஆட்சியாளர்களால் ஆரம்பிக்கப்பட்ட 17 திட்டங்கள் இடைநடுவே கைவிடப்

15ஆம் பக்கம் பார்க்க

### போதை மாத்திரைகள், ஹெரோயின்

## யாழில் மூவர் கைது

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணம் - பொம்மை வெளிப் பகுதியில் 15 போதை மாத்திரைகள் மற்றும் 50 மில்லிகிராம் ஹெரோயின் போன்றவற்றுடன் 18,19 மற்றும் 21 வயதுடைய சந்தேகநபர்கள் மூவர் கைது செய்யப்பட்டுள்ளனர்.

யாழ்ப்பாணம் மாவட்ட சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகரின் கீழ் இயங்கும் பொலிஸ் புலனாய்வுப் பிரிவினருக்குக் கிடைத்த இரகசியத் தகவலின் அடிப்படையில் யாழ்ப்பாணம்

15ஆம் பக்கம் பார்க்க

## 4 மணி நேரத்துக்குள் கடவுச்சீட்டு

(கொழும்பு)

கடவுச்சீட்டு விண்ணப்பம் சமர்ப்பிக்கப்பட்ட 4 மணி நேரத்திற்குள் உரிய நபருக்கு கடவுச்சீட்டு வழங்கப்படும் என குடிவரவு மற்றும் குடியகல்வுத்

15ஆம் பக்கம் பார்க்க

## வடக்கு, கிழக்கு மாகாண அபிவிருத்தி தொடர்பில்

### உலக வங்கிப் பிரதிநிதிகளுடன் ஜனாதிபதி ஆராய்வு



15ஆம் பக்கம் பார்க்க

**நடுவு நிலை தவறா நன்னெறி காக்கும் உங்கள் நாளிதழ்**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# NEW SCIENCE HALL

**Physical & Industrial Chemistry Seminar**

**V.K. நந்தா**

- Part I (17, 18, 19 /09/2025)
  புதன். வியாழன். வெள்ளி
  காலை 10.00 - 12.00 மணிவரை
- Part II (25, 26/09/2025)
  வியாழன். வெள்ளி
  மாலை 3.00 - 5.00 மணிவரை

இடம் : **New Science Hall**
Kannathiddy Road, Jaffna.
சகல மாவட்டங்களில் இருந்து நேரடியாகவும், Zoom மூலமும் இணைந்து கொள்ளலாம்.

**076 569 3006, 076 566 3006**

(C-3887)



# கண்ணீர் அஞ்சலி

எமது சக நண்பன் **திரு.லோகேஸ்வரன்**
அவர்களின் அன்புத் தாயார்



**திருமதி தெய்வாணை**

அவர்களின் பிரிவால் துயருற்றிருக்கும் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவிப்பதோடு அன்னாரின் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

பிறப்பு 31.08.1953
இறப்பு 14.09.2025

ஆழ்ந்த அனுதாபங்கள்:-
யாழ்ப்பாண மருத்துவ பிரதிநிதிகள் சங்கம்


## மாகாண...

கொண்டுவரப்பட்டு நிறைவேற்றப் பட்டமையே காரணம்.

மேலும், சட்ட வரைவால் எல்லை நிர்ணய வரையறைகள் சீர்திருத்தம் குறித்த பிரச்சினை இருக்கின்றது.

இது தீர்க்கப்பட்டால் உடன டியாகத் தேர்தல் நடைபெறும். அதற்கு திணைக்களம் தயாராக இருக்கின்றது.

குறித்த தீர்மானத்தை தற்போது பாராளுமன்றில் தனிநபர் பிரேர ணையூடாக நிறைவேற்றி மீண்டும் பழைய முறைமையை நடை முறைப்படுத்த பாராளுமன்றம் தீர்மானம் நிறைவேற்றி னால் பழைய முறைமையில் தேர்தலை நடத்த முடியும். அதற்கு ஏற்ற கால அவகாச மும் உள்ளது எனத் தெரிவித் தார். (ம-7,33)


# வண்ணை வீரமாகாளி அம்மன் தேவஸ்தான சிங்காரவேலன் சிவகாயத்ரி சுவர்க்கவாயில் சந்நிதானம்



## மஹாளய 9ம் உற்சவ விஞ்ஞாபனம்

**16.09.2025 செவ்வாய்க்கிழமை**

நேசம் நிறைந்த நெஞ்சத்தீர்!
வண்ணை ஸ்ரீ வீரமாகாளியம்மன் ஆலய வளாகத்தின் ஈசான பாகத்தில் அமைந்துள்ள சிங்கார வேலன் சிவகாயத்ரி சுவர்க்கவாயில் சந்நிதானத்தில் மஹாளய 9ம் நாள் வழிபாடு இன்று சிறப்பாக நடைபெற ஒழுங்கு செய்யப்பட்டுள்ளது.

**உற்சவ விபரம்**

**கும்ப பூஜை** காலை 9.30 மணி
**மூலஸ்தான பூஜை** காலை 10.30 மணி
**சிரார்த்த வழிபாடு** பகல் 11.00 மணி

**அன்னதானம் ந.ப 12.00 மணிக்கு ஆரம்பமாகும்**

**குறிப்பு:-** மூதாதையர்களுக்கு பிண்டம் இட்டு தர்ப்பணம் செய்து கொள்ள விரும்புபவர்கள் 21.09.2025ஆம் திகதி வரை சிறப்பாக செய்து கொள்வதற்கு ஒழுங்கு செய்யப்பட்டுள்ளது.

குறித்த வழிபாடுகளில் ஈடுபட்டு வீரமாகாளி தாயாரின் திருவருளைப் பெற்றுய்வீர்களாக

**உபயம் : திரு.தம்பியப்பா விஜயகுமார் குடும்பம்**
(அவுஸ்திரேலியா)

"தெளிவே என் சிந்தனையுள்"

இங்ஙனம் - **கௌரவ கலாநிதி ராஜஸ்ரீ சிவகமல்ராஜ் குருக்கள்**
முதன்மை பிரதம குருவும் ஆதீனகர்த்தாவும்
வண்ணை ஸ்ரீ வீரமாகாளி அம்மன் தேவஸ்தானம்

(C-3884)



**யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம், இலங்கை**

**பேராசிரியர்.கா.கைலாசநாதக்குருக்கள்**
(தகைசால் பேராசிரியர்)
**நினைவுப்பேருரை - 2025**

**பேருரைத் தலைப்பு :**
"சமஸ்கிருத மொழியும் சிவாகம மரபும்- இலங்கையை முன்னிறுத்தியது"

**பேருரை வழங்குனர் :**
**திரு.ச.பத்மநாபன்,**
சிரேஷ்ட விரிவுரையாளர், சமஸ்கிருதத் துறை,
பீடாதிபதி, இந்துக் கற்கைகள் பீடம்,
யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்.

**திகதி :**
17.09.2025 (புதன்கிழமை) பி.ப 3.00 மணி

**நிகழ்விடம் :**
கைலாசபதி கலையரங்கம்,
யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்.

ஆர்வலர்கள் அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

பதிவாளர்,
யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்

(C-3886)



**வலம்புரி**
விளம்பரத் தொடர்புகளுக்கு
**076 636 3378, 076 097 3127**



# சிறுவர் இல்லத்திற்குச் சொந்தமான வாகனங்கள், இயந்திரங்கள் ஏல விற்பனை

எமது மகாதேவா சுவாமிகள் சிறுவர் இல்லத்திற்குச் சொந்தமான பின்வரும் விபரங்களினை உடைய வாகனங்கள், இயந்திரங்கள் கலப்பைகள் மற்றும் வருடாந்த பொருட் கணக்கெடுப்பின்போது விற்பனைக்கு சிபார்சு செய்யப்பட்ட பொருட்கள் எதிர்வரும் 28.09.2025 ஞாயிற்றுக்கிழமை காலை 10.00 மணிக்கு சிறுவர் இல்லத்தின் பிரதான அலுவலக வளாகத்தில் ஏலத்தின் மூலம் விற்பனை செய்வதற்கு எமது முகாமைக்குழு தீர்மானித்துள்ளது. அதற்கேற்ப வாகனங்கள், இயந்திரங்கள் மற்றும் பொருட்களினை பெற விரும்புவோர் குறித்த திகதியில் குறித்த நேரத்திற்கு வருகை தந்து ஏலக் கேள்வியில் அதிகூடிய தொகையினைக் கோரி பெற்றுக் கொள்ள முடியும்.

அத்தோடு இவற்றினை நேரில் பார்வையிட விரும்புவோர் 17.09.2025 ஆம் திகதி தொடக்கம் 27.09.2025 ஆம் திகதி வரை காலை 9.00 மணி தொடக்கம் மாலை 4.00 வரை பார்வையிடலாம் என்பதனை அறியத்தருகின்றோம்.

குறிப்பு : ஏலத்தில் பெற்றுக் கொண்ட பொருட்களுக்கு ஏலதாரர்கள் தாங்கள் கோரிய தொகையினை அன்றைய தினமே செலுத்தி பெற்றுக்கொண்ட வாகனங்களினையோ, இயந்திரங்களினையோ அல்லது பொருட்களினையோ உடன் இல்ல வளாகத்திலிருந்து வெளிக்கொண்டு செல்லுதல் வேண்டும் என்பதோடு, குறித்த ஏல விற்பனை தொடர்பில் எமது ஏலக் குழுவின் தீர்மானமே இறுதியானதாக இருக்கும் என்பதனையும் அறியத்தருகின்றோம்.

வாகன விபரம்


| | |
|---|---|
| 01.உந்துருளி (Moter Bike) - 04 | 04.றொட்டபிற் கலப்பை - 01 |
| 02. உழவு இயந்திரம் - 04 | 05.லான் மாஸ்ரர் - 01 |
| 03.உழவு இயந்திரக் கலப்பை - 01 | |


ச.மோகனபவன்
தலைவர்,
மகாதேவா சுவாமிகள் சிறுவர் இல்லம்,
ஜெயந்தி நகர், கிளிநொச்சி.
077 324 0950, 021 492 3118

(C-3885)



# பாராட்டி வாழ்த்துகின்றோம்





**செல்வன் ர.தனுகரன்** **செல்வன் இ.ஜெனிஸ்ரன்**

எமது பாடசாலையின் வரலாற்றுச் சாதனையாக தேசிய மட்டப் பளு தூக்கல் போட்டியில் செல்வன் **ர.தனுகரன்** 17 வயதுப் பிரிவில் 73 kg எடைப் பிரிவில் 134 kg எடையினை தூக்கி வெண்கலப் பதக்கத்தையும் செல்வன் **இ.ஜெனிஸ்ரன்** 20 வயதுப் பிரிவில் 55 kg எடைப்பிரிவில் 145 kg எடையினைதூக்கிவெள்ளிப்பதக்கத்தையும்பெற்றுக்கொண்டனர்.

Congratulation

வாழ்த்துவோர்:-பாடசாலைச் சமூகம்
கிளி/பூநகரி மத்திய கல்லூரி.

(5431)


Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# 10 ஆண்டுகளுக்கு தேவையான போதைப்பொருள் நாட்டில்..!

## வெளியான அதிர்ச்சித் தகவல்

(கொழும்பு)

**இலங்கையில் சுமார் 10 ஆண்டுகளுக்கு தேவையான போதைப்பொருள் கையிருப்பு உள்ளது என தெரிவிக்கப்படுகின்றது. பிரதி அமைச்சர் டி.பி சரத் இந்த விடயத்தை தெரிவித்துள்ளார்.**

நாட்டுக்கு போதைப்பொருள் கொண்டு வரப்படும் அனைத்து வழிகளும் நிறுத்தப்பட்டாலும் இன்னமும் 10 ஆண்டுகளுக்கு தேவையான போதைப் பொருள் கையிருப்பு இருப்பதாக அவர் தெரிவித்துள்ளார்.

அவ்வளவு பாரிய தொகை போதை பொருட்கள் நாட்டுக்குள் கொண்டுவரப்பட்டுள்ளதாக அவர் தெரிவித்துள்ளார்.

பெருமளவு போதைப் பொருட்கள் மண்ணுக்குள் களஞ்சியப்படுத்தப்பட்டுள்ளதாக அவர் தெரிவித்துள்ளார்.

கொள்கலன்களின் ஊடாக பெருந்தொகை போதைப் பொருட்கள் களஞ்சியப்படுத்தப்பட்டுள்ளதாகவும் இது நாட்டுக்கு பெரும் அழிவை ஏற்படுத்தும் எனவும் அவர் தெரிவித்துள்ளார்.

நிகழ்வு ஒன்றில் பங்கேற்று உரையாற்றிய போது அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார். போதைப்பொருள் ஒழிப்பு நடவடிக்கைகள் தீவிரப்படுத்தப்படும் என அவர் மேலும் குறிப்பிட்டுள்ளார். (நி)



## புழக்கத்திற்கு விடப்படும் 2000 ரூபா

(கொழும்பு)

சமீபத்தில் வெளியிடப்பட்ட ரூ.2000 நினைவு நாணயத் தாள் படிப்படியாக உரிமம் பெற்ற வணிக வங்கிகள் மூலம் புழக்கத்தில் விடப்படும் என்று இலங்கை மத்திய வங்கி தெரிவித்துள்ளது.

மத்திய வங்கி அதன் 75 ஆவது ஆண்டு நிறைவைக் குறிக்கும் வகையில், ஆகஸ்ட் 29 ஆம் திகதி ரூ.2000 நினைவு நாணயத்தாளை வெளியிட்டது.

இந்நிலையில், புதிய நாணயத்தாளை சுமூகமாக ஏற்றுக் கொள்வதற்கும் விநியோகிப்பதற்கும் வசதியாக, உரிமம் பெற்ற வணிக வங்கிகள் தங்கள் பணத்தை கையாளும் இயந்திரங்களை அளவீடு செய்யும் பணியில் ஈடுபட்டுள்ளன.

செயல்முறையின் வேகத்திற்கு ஏற்ப, புதிய நாணயத் தாள் படிப்படியாக உரிமம் பெற்ற வணிக வங்கிகள் மூலம் புழக்கத்தில் விடப்படும்.

அளவுத்திருத்த செயல்முறை முடிந்ததும், புதிய நாணயத் தாள் அனைத்து வங்கிகளிலும் தடையின்றி கிடைக்கப்பெறும் என்று மத்திய வங்கி உறுதியளித்துள்ளது. (நி)

## யார் தவறிழைத்தாலும் சட்டம் பாயும்

### அமைச்சர் சமந்த

(கொழும்பு)

அரசாங்கத்துக்குள் கையூட்டல் மோசடிகள் இடம் பெற்றாலும் அவற்றுக்கு எதிராகவும் நடவடிக்கை எடுப்பதில் பின் வாங்கப் போவதில்லை என அமைச்சர் சமந்த வித்தியா ரத்ன தெரிவித்துள்ளார்.

அத்துடன், கொள்கலன் விடுவிக்கப்பட்டமை குறித்து விசாரணைகள் முன்னெடுக்கப்பட்டு வருகின்றதுடன், அதில் யார் தவறிழைத்திருந்தாலும் அவர்கள் அரசாங்கத்தைச் சேர்ந்தவர்களாக இருந்தாலும் சட்டம் உரிய முறையில் நடைமுறைப்படுத்தப்படும் எனவும் அவர் சுட்டிக் காட்டியுள்ளார்.

கொழும்பில் இடம்பெற்ற நிகழ்வொன்றில் கலந்து கொண்டதன் பின்னர் ஊடகங்களுக்குக் கருத்து தெரிவிக்கும் போதே அவர் இதனைத் தெரிவித்துள்ளார். 0(நி)

## மற்றுமோர் ஐஸ் உற்பத்தி தொழிற்சாலை கண்டுபிடிப்பு

(கொழும்பு)

அம்பாந்தோட்டையில் அமைந்துள்ள அடுக்குமாடி குடியிருப்பு ஒன்றில் இயங்கும் ஐஸ் போதைப்பொருள் உற்பத்தி தொழிற்சாலையை களுத்துறை குற்றப் பிரிவு கண்டுபிடித்துள்ளது.

இந்த சோதனையின் போது, ஐஸ் உற்பத்திக்கு பயன்படுத்தப்பட்டதாக சந்தேகிக்கப்படும் உபகரணங்கள், இரசாயனங்கள் மற்றும் போதைப்பொருட்களை கொண்டு செல்ல பயன்படுத்தப்பட்டதாக நம்பப்படும் ஒரு வாகனம் ஆகியவற்றை அதிகாரிகள் பறிமுதல் செய்துள்ளனர்.

ஐஸ் போதைப்பொருள் தயாரிப்பில் பயன்படுத்தப்பட்டதாக சந்தேகிக்கப்படும் மொத்தம் 52 லீற்றர் இரசாயனங்கள் அடங்கிய 14 கான்களையும், போதைப்பொருள் உற்பத்தி செயல்முறையின் ஒரு பகுதியாக நம்பப்படும் பல்வேறு உபகரணங்களையும் அதிகாரிகள் இதன்போது கண்டுபிடித்தனர்.

இந்தச் சம்பவம் தொடர்பாக வெல்லவாயவைச் சேர்ந்த 20 வயதுடைய ஒருவர் கைது செய்யப்பட்டுள்ளார்.

அவர் அண்மையில் கைது செய்யப்பட்ட பாதாள உலகக் குழு உறுப்பினர் சுரங்காவின் சகா என அடையாளம் காணப்பட்டுள்ளார்.

சந்தேக நபர் பாணந்துறை நீதிவான் நீதிமன்றத்தில் முன்னிலைப்படுத்தப்பட உள்ளார்.

இந்தோனேசியாவில் அண்மையில் பாதாள உலகக் குழு உறுப்பினர்கள் கைது செய்யப்பட்டதைத் தொடர்ந்து, இலங்கை அதிகாரிகளால் கண்டுபிடிக்கப்பட்ட அண்மைய ஐஸ் போதைப்பொருள் உற்பத்தி தொழிற்சாலை இதுவாகும்.

முன்னதாக, நுவரெலியா, மித்தேனியா, நெட்டோல்பிட்டிய மற்றும் கந்தான ஆகிய இடங்களில் இதுபோன்ற ஐஸ் போதைப்பொருள் உற்பத்தி தொழிற்சாலைகளை அதிகாரிகள் கண்டுபிடித்தமையும் குறிப்பிடத்தக்கது. (நி)

## வெப்பமான காலநிலை; அதிக நீர் அருந்துமாறு அறிவுறுத்து

(கொழும்பு)

நாட்டில் நிலவும் அதிகரித்த வெப்பத்தால் அதிக நீர் அருந்துமாறும், வெப்பம் தொடர்பான நோய்களைத் தவிர்க்க பாதுகாப்பு நடவடிக்கைகளை முன்னெடுக்குமாறும் சுகாதார மற்றும் பாதுகாப்பு அதிகாரிகள் மக்களை கேட்டுள்ளனர்.

அதேநேரம், வெளிப்புற வேலைத் தளங்களில் பணிபுரியும் தொழிலாளர்கள் அதிக நீர் அருந்தவும் நிழலான பகுதிகளில் ஓய்வெடுக்கவும் தங்கள் செயற்பாடுகளை வேகப்படுத்தவும் அறிவுறுத்தப்பட்டுள்ளனர்.

வயதானவர்கள் மற்றும் நோயாளிகள் மிகுந்த அவதானமாக செயற்படுமாறு கேட்டுக்கொள்ளப்பட்டுள்ளனர்.

அதேநேரத்தில், பெற்றோர்கள், குழந்தைகளை வாகனங்களுக்குள் கவனிக்காமல் விட்டுவிடக் கூடாது எனவும் நினைவூட்டப்பட்டுள்ளது.

வெளிப்புற நடவடிக்கைகளை மட்டுப்படுத்தவும் நீரேற்றம், ஓய்வு மற்றும் நிழலுக்கு முன்னுரிமை அளிக்கவும் குளிர்ச்சியாக இருக்க வெளிர் நிற, சுவாசிக்கக்கூடிய ஆடைகளை அணியவும் வேண்டுமென அதிகாரிகள் பரிந்துரைக்கின்றனர். (நி)

## கைது செய்யப்படுவோரின் எண்ணிக்கையை குறைக்க வேண்டும்

(கொழும்பு)

கைது செய்யப்பட்டு சிறையில் அடைக்கப்படுபவர்களின் எண்ணிக்கையைக் குறைப்பதே அரசாங்கத்தின் நோக்கமாக இருக்க வேண்டும் என்று நீதி மற்றும் தேசிய ஒருங்கிணைப்பு அமைச்சர், சட்டத் தரணி ஹர்ஷன நாணயக்கார தெரிவித்துள்ளார்.

சமீபத்தில் நடைபெற்ற 27 ஆவது கைதிகள் தின விழாவில் பங்கேற்று உரையாற்றும் போதே அமைச்சர் இதனைத் தெரிவித்தார்.

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவிக்கையில்,

சிறைகளில் தற்போது கைதிகள் கூட்டம் அதிகமாக இருப்பதாகவும், அந்த நெரிசலைக் குறைத்து தேவையான வசதிகளை வழங்குவது அரசாங்கத்தின் பொறுப்பு.

சிறையில் அடைக்கப்படுபவர்களின் எண்ணிக்கையைக் குறைப்பதும், சிறையில் அடைக்கப்பட்டுள்ள அனைவரின் மனித உரிமைகளையும் பாதுகாக்கும் வசதிகளை உருவாக்குவதும் மிகவும் முக்கியம்.

சட்டத்தின் முன் அனைத்து மக்களும் சமம் என்றும், ஒரு அரசாங்கமாக, சட்டத்தின் மேலாதிக்கத்தை உறுதி செய்வதன் மூலம் சமத்துவ நாட்டை உருவாக்குவோம் என்று மேலும் தெரிவித்தார்.

இதற்கிடையில், கைதிகள் நல தினத்தை முன்னிட்டு, நாட்டில் உள்ள 28 சிறைச் சாலைகளையும் உள்ளடக்கிய கைதிகளுக்கான ஆன்மிகம், விளையாட்டு, சுகாதாரம், கலாசாரம் மற்றும் சட்ட ஆலோசனை திட்டங்களை ஏற்பாடு செய்வதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன. (நி)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தேசியமட்ட பளுதூக்கலில் மகாஜனவிற்கு 4 பதக்கங்கள்



அகில இலங்கை பாடசாலைகளுக்கு இடையிலான தேசிய மட்ட பளுதூக்கல் போட்டியில் தெல்லிப்பளை மகாஜனக் கல்லூரி இரண்டு வெள்ளிப்பதக்கங்கள். இரண்டு வெண்கலப் பதக்கங்கள் என 4 பதக்கங்களைக் கைப்பற்றி உள்ளனர்.

அகில இலங்கை பாடசாலைகளுக்கு இடையிலான தேசிய மட்ட பளுதூக்கல் போட்டி பொலநறுவை றோயல் கல்லூரி உள்ளக விளையாட்டரங்கில் நடைபெற்றது.

இதில் தெல்லிப்பளை மகாஜனக் கல்லூரி மாணவன் வி.சாதுரியன் 17 வயதிற்கு உட்பட்ட ஆண்களுக்கான போட்டியில் 55 கிலோ எடைப் பிரிவில் 129 கிலோ பளுவைத் தூக்கி வெண்கல பதக்கத்தையும். ச.ஷாஹனுஜா 17 வயதிற்கு உட்பட்ட பெண்களுக்கான போட்டியில் 81 கிலோ எடைப் பிரிவில் 75 கிலோ பளுவைத் தூக்கி வெண்கலப் பதக்கத்தையும் கைப்பற்றியிருந்தனர்.

அத்துடன் 20 வயதிற்கு உட்பட்ட ஆண்களுக்கான போட்டியில் ஜெ.ஜெனுசின் 109 கிலோ எடைப் பிரிவில் 195 கிலோ பளுவைத் தூக்கி வெள்ளிப் பதக்கத்தையும், ர. ஸ்ரீவித்தகி 20 வயதிற்கு உட்பட்ட பெண்களுக்கான போட்டியில் 71 கிலோ எடைப் பிரிவில் 107 கிலோ பளுவைத் தூக்கி வெள்ளிப் பதக்கத்தையும் கைப்பற்றி சாதனை படைத்துள்ளனர். (3-90)

## தேசிய பளுதூக்கல் போட்டி

### சுண்டுக்குழி மகளிர் கல்லூரிக்கு வெள்ளி, வெண்கலப் பதக்கங்கள்



அகில இலங்கை பாடசாலைகளுக்கு இடையிலான தேசிய மட்ட பளுதூக்கல் போட்டியில் சுண்டுக்குழி மகளிர் கல்லூரியினர் வெள்ளி மற்றும் வெண்கலப் பதக்கங்களை கைப்பற்றி உள்ளனர்.

அகில இலங்கை பாடசாலைகளுக்கு இடையிலான தேசிய மட்ட பளுதூக்கல் போட்டி பொலநறுவை றோயல் கல்லூரி உள்ளக விளையாட்டரங்கில் நடைபெற்றது.

இதில் சுண்டுக்குழி மகளிர் கல்லூரி மாணவி அ.சானியா 20 வயதிற்கு உட்பட்ட பெண்களுக்கான போட்டியில் 87 கிலோவுக்கு மேற்பட்ட எடைப் பிரிவில் 110 கிலோ பளுவைத் தூக்கி வெள்ளிப் பதக்கத்தையும்,

ஜெ.சாதனா 20 வயதிற்கு உட்பட்ட 87 கிலோ எடைப் பிரிவில் 65 கிலோ பளுவைத் தூக்கி வெண்கல பதக்கத்தையும் கைப்பற்றினர். (3-90)


## உடன் விற்பனைக்கு

01.யாழ்.ஆஸ்பத்திரி வீதியில் வைத்தியசாலைக்கு முன்பாக 11 அடி அகலமும் 60 அடி நீளமும் கொண்ட மூன்று மாடிக் கடையும்

02.யாழ்.கீரிப்பிள்ளையார் கோவிலுக்கு அண்மையில் 2½ பரப்பில் அமைந்த வீடும் காணியும்

03.யாழ்.தாவடிச் சந்திக்கு அண்மையில் 10 பரப்புக் காணியும்

04.யாழ்.குறொஸ் வீதிச்சந்தியில் 10 பரப்புக் காணியும்

05.யாழ்.கே.கே.எஸ் வீதியில் சிவன் கோவிலுக்கு அண்மையில் கே.கே.எஸ் வீதி முகப்புடன் 6 பரப்புக் காணியும்

06.யாழ்.விக்டோரியா வீதியில் 16 பரப்பு, 12 பரப்பு, 14 பரப்புக் காணிகளும் உடன் விற்பனைக்குண்டு

077 723 2535

(C-3891)



## கண்ணீர் அஞ்சலி



தோற்றம் 22.07.1943

மறைவு 12.09.2025

எமது பாடசாலையின் சக ஆசிரியர்
திருமதி யசோதமலர் சிவதாசன்
அவர்களுடைய அன்பு மாமியார்

திருமதி
செ.பாலசரஸ்வதி

அவர்கள் 12.09.2025 அன்று காலமாகி விட்டார். அன்னாரின் பிரிவால் துயருற்று இருக்கும் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவித்துக் கொள்வதுடன் அவரது ஆத்மா சாந்திபெற இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

ஆசிரியர் கழகம்
யா/கொல்லங்கலட்டி சைவத் தமிழ் வித்தியாலயம்

(C-3888)


## கரப்பந்தாட்டப்போட்டி

(யாழ்ப்பாணம்)

இளவாலை வருத்தப்படாத வாலிபர் சங்கத்தினால் அமரர் சிவகுருநாதன் ஞாபகார்த்தமாக நடத்தப்படும் மாபெரும் கரப்பந்தாட்டச் சுற்றுப் போட்டி இன்று செவ்வாய்க்கிழமை முதல் ஆரம்பமாகவுள்ளது.

யாழ். மாவட்ட ரீதியில் அழைக்கப்பட்ட 12 கழகங்களிடையேயான இப் போட்டி இளவாலை வாலிபத்திடலில் மின்னொளியில் நடைபெறவுள்ளது. (ம-7)

## எதிர்க்கட்சி...

தெரிவித்தார். அவர் தொடர்ந்து தெரிவிக்கையில்,

இங்கு மேலும் தெரிவித்த எதிர்க்கட்சித் தலைவர் தற்போது பாராளுமன்றத்தில் பொது மக்கள் எதிர்நோக்கும் பிரச்சினைகளை முன்வைப்பதற்கான சந்தர்ப்பங்கள் குறைக்கப்பட்டுள்ளன. மக்களின் பிரச்சினைகளை சுட்டிக்காட்டப்படும்போது, ஒலிவாங்கியைத் துண்டிக்கும் நிலைக்கு அரசாங்கம் வந்துள்ளது. எதிர்க்கட்சித் தலைவராக நானும் எதிர்க்கட்சியைச் சேர்ந்த சக உறுப்பினர்களும் தனிப்பட்ட விடயங்களை வெளிப்படுத்துவதை விடுத்து மக்கள் பிரச்சினைகளை முன்வைப்பதற்காகவே எழுந்து நிற்கிறோம்.


இவ்வாறு மக்கள் பிரச்சினைகளை முன்வைக்கும் சந்தர்ப்பங்களில் அதைத் தடுப்பது கருத்துகளை வெளியிடுவதற்கு தடங்கல் ஏற்படுத்துவது கீழ்த்தரமானதும் இழிவான செயலாகும்.

ஒலிவாங்கிகளைத் துண்டிப்பதையோ அல்லது விவாதத்தைச் சீர்குலைப்பதையோ விடுத்து எதிர்க்கட்சியால் முன்வைக்கப்படும் மக்கள் பிரச்சினைகளைக் கேட்டறிந்து நடைமுறை ரீதியான பதில்களை பெற்றுக் கொடுக்கும் பணியையே அரசாங்கம் முன்னெடுக்க வேண்டும். தீர்வுகளை வழங்கும் யுகத்துக்கு மாறாக எதிர்க்கட்சியின் குரலை அடக்கும், பொய்யான கதைகளை முன்வைக்கும் யுகமே தற்சமயம் காணப்படுகின்றது.

இவ்வாறு பிரச்சினைகளை நாம் முன்வைப்பது அரசியல் நாடகமல்ல. மாறாக மக்களின் பிரச்சினைகளை அரசாங்கத்திற்கு முன்வைப்பதும் மக்களின் பிரச்சினைகளுக்குத் தீர்வுகளை வழங்கத் தேவையான வழிகாட்டுதலை வழங்குவதுமாகும். 2020 முதலே நாம் இவ்வாறு பாராளுமன்றத்தில் கேள்விகளை எழுப்பி வருகிறோம். ஆகவே இது ஓர் அரசியல் நாடகமல்ல என்பதைப் புரிந்து கொள்ள வேண்டும். அரசாங்கத்தின் பல்வேறு நாடகங்களுக்கு மக்கள் சிக்கிக் கொண்டாலும் எதிர்க்கட்சியாக ஐக்கிய மக்கள் சக்தி பல்வேறு நடவடிக்கைகளை... மக்கள் சக்தி நாடகங்களை நடத்தாது மக்களினது பிரச்சினைகளுக்கு உண்மையான தீர்வுகளை வழங்கி வருகிறது என்று எதிர்க்கட்சித் தலைவர் தெரிவித்தார். (ம-7)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தமிழ் ஆற்றலாளர் பலரை உருவாக்கிய ஆசான் சிவராமலிங்கப்பிள்ளை



தமிழ் ஆற்றலாளர் பலரை உருவாக்கிய ஆசான் க.சிவராமலிங்கப்பிள்ளை அவர்களின் நூற்றாண்டு ஜனன தினத்தையொட்டி இக்கட்டுரை பிரசுரமாகிறது

ஈழத்திருநாட்டில் பல சான்றோர்களை நம்மண்ணுக்குத் தந்த புங்குடுதீவு கிராமத்தில் 16.09.1925ஆம் ஆண்டு இப்பெருமகனார் பிறந்தார். சைவ சித்தாந்த அறிஞரும் சிறந்த ஆயுள்வேத வைத்தியருமாகிய கணபதிப்பிள்ளை செல்லம்மா தம்பதிகளுக்கு மைந்தனாக இவர் பிறந்தார். சிவபூசையும் சைவசித்தாந்தப் பாரம்பரியமும் பேணிய இக்குடும்பத்தில் பிறந்த இவர் புங்குடுதீவு சுப்பிரமணிய வித்தியாசாலையிலும் யாழ்ப்பாணம் வண்ணை வைத்தீஸ்வரா வித்தியாலயத்திலும் தனது ஆரம்பக் கல்வியை கற்றார். 1941 ஆம் ஆண்டு யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரியில் ஆங்கில மொழிமூலம் தனது கல்வியைத் தொடர்ந்தார். இந்துக் கல்லூரி வாழ்வில் தமிழ் ஆங்கிலப் பேச்சுப் போட்டிகளில் பங்குபற்றி வெற்றி வாகை சூடினார். கல்லூரி நாடக அரங்குகளில் பங்கு கொண்டு பிரபல்யம் பெற்றார். கல்லூரியின் சிரேஷ்ட மாணவ முதல்வனாகவும் விடுதிச்சாலை மாணவ முதல்வனாகவும் விளங்கினார். பாடசாலை விவாதக் குழுவில் தலைமை தாங்கி வட்டுக்கோட்டை யாழ்ப்பாணக் கல்லூரியோடும் யாழ் மத்திய கல்லூரியோடும் ஆங்கில விவாதப் போட்டிகளில் பங்குபற்றி பாராட்டுப் பெற்றார். அதிபர் A.குமாரசாமி அவர்கள் இவரது திறமையைக் கண்டு பெரிதும் பாராட்டினார். பாடசாலை மாணவனாக கற்கும் போதே சைவபரிபாலன சபை நிகழ் ச்சியில் ஆசிரியர் மயில்வாகனம் வாயப்பை ஏற்படுத்தினார். சைவ பரிபாலன சபை மாநாட்டில் இந்திய அறிஞர்கள் சபையில் பாராட்டுப் பெற்றார். விஞ்ஞானத் துறையில் கற்றுக் கொண்டிருந்த இவர் தமிழில் கொண்ட ஆர்வம் கார ணமாக அண்ணாமலைப் பல்கலைக் கழகம் சென்று பேரறிஞர்களிடம் கற்றுத் தேறினார். அங்கு பட்டம் பெற்று நாடு திரும்பியதும் 1950 இல் யாழ்ப்பாணம் இந்துக்கல்லூரி நிர்வாகம் இவரை ஆசிரியராக நியமித்தார்கள். 1950முதல் 1995 வரை யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரியில் புலமைமிக்க ஆசானாக சீரிய பணியாற்றினார். இருமொழிப் புலமையும் ஆளுமையும் மிக்க ஆசிரியரவர்கள் திடீரென நோய்வாய்ப்பட்டு அவரது ஒருகால் நடக்க முடியாத நிலை ஏற்பட்டது. எனினும் மனம்தளராது கோலூன்றியவாறு வகுப்பறைகளில் கற்பிப்பதோடு மேடைகளில் அரும்தமிழ் முழக்கம் செய்து வந்தார். யாழ்ப்பாணத்தில் நடைபெறும் எந்தத் தமிழ் விழாவிலும் சைவ சமய விழாவிலும் இவரது உரை முக்கிய இடம்பெற்றது. இவரிடம் கற்றவர்கள் இலக்கிய உலகில் நன்கு பிரகாசித்தனர். சுந்தரர் டீவகலாலா, செங்கை ஆழியான், செம்பியன் செல்வன், பேராசிரியர் பொ.பாலசுந்தரம் பிள்ளை போன்ற அறிஞர்கள் இவரது தலை மாணாக்கர்கள் எனலாம். பல நூற்றுக் கணக்கான மாணவர்களை மேடையேற்றி பேசவைத்த பெருந்தகை இவர். அகில இலங்கை கம்பன்கழக பிதாமகன் கம்பவாரிதி முதல் என் போன்ற பலரை இந்துக் கல்லூரி மேடைக்கு அறிமுகம் செய்தவர். ஏழை மாணவர்கள் மீது என்றும் இரக்கம் காட்டுபவர். அவரது இரக்கம் பற்றி விடுதிச்சாலையில் இருந்த மாணவர்கள் இன்றும் சொல்லி மகிழ்வார்கள். தூய வெள்ளைவேட்டி, வெள்ளைச் சேட், திருநீறு, சந்தனம் அவரது சிறந்த மேனியை மேலும் அழகுபடுத்தும். 'சேக்ஷ்க்ஸ்பியர் பற்றியும் பேசுவார் சேக்கிழார் பற்றியும் பேசுவார்'. அவரது இருமொழிப் புலமை பலருக்கு பயன் தந்தது. அவர் இறக்கும் வரை நேர்முகப் பரீட்சைக்கு செல்பவர்கள் அவரிடம் நற்சான்று பெறக் காத்திருப்பார்கள்.

ஆசானின் மாணவர்கள் பேராசிரியர்களாக, அரச அதிபர்களாக, பிரதேச செயலர்களாக, சிறந்த கல்வியாளர்களாக விளங்கினர். ஆரம்பத்தில் விஞ்ஞானத் துறையிலும் சிறப்பாக கற்பித்த காரணத்தினால் பல்துறைசார்ந்த விற்பன்னர்கள் இவரிடம் கற்றவர்களாக விளங்கினர். ஆசிரியர் கலாசாலையில் சில வருடங்கள் விரிவுரையாளராக பணியாற்றினார். அதனால் பல ஆசிரிய மாணவர்கள் இவரிடம் கற்கும் வாய்ப்பை பெற்றனர். சைவசித்தாந்த அறிவும் தமிழ் இலக்கண இலக்கிய அறிவும் மிக்க இவரிடம் பல்கலைக்கழக மாணவர்களும் சென்று கற்றனர். இவரது கந்தர் மடம் வீடு அன்றும் இன்றும் அறிவாலயமாகவே திகழ்கிறது.

கம்பன்கழக காவலராக விளங்கிய எங்கள் ஆசானிடம் ஒன்பதாம் வகுப்பு முதல் தமிழ் கற்கும் பேறு சிறியேனுக்கு கிடைத்தது. எனது தாய், தந்தை இருவரும் ஆசிரியர்கள். எனது தாயார் யாழ் இந்துக் கல்லூரி குருளைச் சாரணி ஆசிரியராக விளங்கியவர். அதனால் குடும்ப நட்பாக எனக்கும் அவருக்கும் உள்ள தொடர்பு நீண்டது. எனது முன்னேற்றத்தில் மிகவும் அக்கறையாக விளங்கினார். கம்பன் கழகத்தில் எதிரும் எதிருமாக பட்டிமன்றம் விவாத அரங்குகளில் பேசும் வாய்ப்பு கிட்டியது. மேடையால் இறங்கியதும் நல்லாய் பேசினாய் என்று முதுகில் தட்டிப் பாராட்டுவார். கம்பவாரிதி நடுவராக வீற்றிருக்க அணித் தலைவராக அவரது ஆசிரியராகிய சிவராமலிங்கப்பிள்ளை பேசுவார். இத் தகைய பெருந்தன்மை இன்று யாரிடம் உள்ளது. எவரது பிரச்சினையையும் தீர்த்துவைக்கும் மனிதநேயர். மற்றவர்களுக்காக தனது முச்சக்கர வண்டியில் எங்கும் சென்று வருவார். அவரது ஆசிரிய நண்பர்கள் இவரை ஒரு தலைமகனாகவே கொள்வர். இவர் இறப்பதற்கு சில ஆண்டுகளுக்கு முன்பு ஆசிரியர் க.சொக்கலிங்கம்(எழுத்தாளர்.சொக்கன்) இறந்தார். என்ன ஆச்சரியம் செம்மணிச் சுடலையில் எங்கள் ஆசான் முச்சக்கர வண்டியில் தானே ஓடிவந்து விட்டார். சுடலையில் தேவன், சோமன், சொக்கன் போய்விட்டார்கள் எனி இராமனும் போகத்தானே வேணும் என்று கண்ணீர் விட்டார். சேட் கொலருக்குள் எப்பவும் கைத்துண்டு வைத்திருப்பார். கைத்துண்டை எடுத்து கண்ணைத் துடைத்து துடைத்து நண்பனுக்காய் அழுதார்.

என்றும் உயர்ந்த பண்புகள் கொண்ட எங்கள் ஆசான் யாழ்ப்பாண பல்கலைக்கழக கலைப்பீடத்தின் நீண்டகால ஆலோசகராக விளங்கினார். நடமாடும் கலைக் களஞ்சியமாக திகழ்ந்தார். என் அன்புக்குரிய ஆசான் இறப்பதற்கு சில வாரங்களுக்கு முன்பு நல்லூர் துர்க்கா மணிமண்டபத்தில் கண்டு கண்தானப் படிவத்தைத் தா என்று வலியுறுத்தினார். நான் நகைச்சுவையாக அவரோடு பேசினேன். நான் சீரியசாகப் பேசுகிறேன் படிவத்தைக் கொண்டுவா என்று கட்டளை இட்டார். மறுநாள் படிவத்தைக் கொடுத்தேன். கண்தானப் படிவத்தை நிரப்பியதோடு கடிதம் ஒன்றும் எழுதித் தந்தார். தன் இறப்புக்குப் பின்னால் இரண்டு கண்களையும் எடுத்து பார்வை பிரச்சினை உள்ளவர்களுக்கு கொடுங்கள். இது எனது பரிபூரண சம்மதம் என எழுதினார். என்ன ஆச்சரியம் ஒருமாத காலத்துக்குள்ளேயே திடீரென ஆசிரியர் இறந்தார். அவரது இறுதி ஆசைப்படி பேரப்பிள்ளைகளின் ஒத்துழைப்போடு யாழ்ப்பாணம் கரையூரைச் சேர்ந்த ஒரு நபருக்கு ஆசானின் கண்கள் எடுத்துப் பொருத்தப்பட்டது. கண்வைத்திய நிபுணர் Dr.குகதாசன் அவர்களும் Dr.செல்வி சரவணமுத்து அவர்களும் இப்பணியை நிறைவேற்றினர்.

அவர் வாழும்போது யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரியில் நாவலர் பெருமானுக்கு உருவச்சிலை வைக்க வேண்டும் என்று ஆசைப்பட்டார். அதனை நிறைவேற்றும் பாக்கியம் எனக்கு கிடைத்தது. சிலைதிறப்பு விழாவில் அவர் ஆற்றிய உரை இன்றும் பசுமையாக உள்ளது. அன்னாரின் இறுதி வைபவத்தில் தலைமை தாங்கி உரையாற்றும் வாய்ப்பு எனக்கு கிடைத்தது. கண்ணீரோடு எங்கள் ஆசானின் இறுதிநாள் கழிந்தமை மறக்கமுடியாது. பலருக்குள் வாழும் இப்பெருவிருட்சம் பிறந்த நூற்றாண்டு விழாவில் நன்றியோடு நினைந்து போற்றுவோம்.

'எந்நன்றி கொன்றார்க்கும் உய்வுண்டாம் உய்வில்லை
செய்ந்நன்றி கொன்ற மகற்கு'

செஞ்சொற்செல்வர்
கலாநிதி ஆறு.திருமுருகன்,
தலைவர்,
ஸ்ரீ துர்க்காதேவி தேவஸ்தானம்
தெல்லிப்பழை



கிளிநொச்சி வட்டக்கச்சி ஸ்ரீ ரங்கநாத பெருமாள் ஆலயத்தின் வருடாந்த மகோற்சவப் பெருவிழாவின் தேர்த் திருவிழா கடந்த 13 ஆம் திகதி பக்திபூர்வமாக இடம்பெற்றது. (படம்:யதுபாஸ்கரன்)


# கண்ணீர் அஞ்சலி



எமது பாடசாலையின் உடற்கல்வி ஆசிரியர்
திரு.ம.மதிவதனன் அவர்களின்
அன்புத் தாயார்

அமரர். மரியதாஸ் திருமலர்

அவர்கள் இறைபதம் அடைந்துள்ளார்.
இவரது பிரிவால் துயருற்றிருக்கும்
குடும்பத்தினருக்கு ஆழ்ந்த
இரங்கலை தெரிவிப்பதோடு
அன்னாரின் ஆத்மா சாந்தியடைய
இறைவனை பிரார்த்திக்கின்றோம்.

(1552)

பாடசாலை சமுகம்,
யா/பாஷையூர் சென்.அன்ரனிஸ் றோ.க.ம. வித்தியாலயம்.


# குறைவடைந்தது ரூபாவின் பெறுமதி

(கொழும்பு)

அமெரிக்க டொலருக்கு நிகராக இலங்கை ரூபாவின் பெறுமதியானது கடந்த வெள்ளிக்கிழமையுடன் ஒப்பிடும் போது நேற்று சற்று குறைந்துள்ளது.

இலங்கை மத்திய வங்கியின் உத்தியோகப்பூர்வ நாணய மாற்று விபரங்களுக்கு அமைவாக, அமெரிக்க டொலர் ஒன்றின் கொள்வனவு மற்றும் விற்பனை பெறுமதியானது இன்று முறையே 298.25 ரூபாவாகவும், 305.77 ரூபாவாகவும் உள்ளது.

கடந்த வெள்ளிக்கிழமை அமெரிக்க டொலர் ஒன்றின் கொள்வனவு மற்றும் விற்பனை விலையானது முறையே 298.11 ரூபாவாகவும், 305.65 ரூபாவாகவும் காணப்பட்டிருந்தது.

ஏனைய பல வெளிநாட்டு நாணயங்களின் பெறுமதிக்கு எதிராகவும் இலங்கை ரூபாவின் மதிப்பு நேற்று குறைந்துள்ளது.

அதே நேரத்தில் வளைகுடா நாணயங்களுக்கு எதிராக அதன் மதிப்பு உயர்ந்துள்ளது. (நி)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 55 மில்லியன் ரூபா செலவில்
# குடமுருட்டிக் குளத்தின் புனரமைப்பு பணிகள் முன்னெடுப்பு

(கண்டாவளை)

கிளிநொச்சி பூநகரி பிரதேசத்துக்குட்பட்ட குடமுருட்டி குளத்தின் புனரமைப்பு பணிகள் சுமார் 55 மில்லியன் ரூபாய் செலவில் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன.

கிளிநொச்சி மாவட்ட நீர்ப்பாசனத் திணைக்களத்தின் கீழ் உள்ள பாரிய நீர்ப்பாசன குளங்களில் ஒன்றாக காணப்படுகின்ற பூநகரி குடமுருட்டி குளத்தின் கீழ் 385 இற்கும் மேற்பட்ட விவசாயிகள் 650 ஏக்கருக்கு மேற்பட்ட நிலப்பரப்பில் பெரும்போக நெற்செய்கை மற்றும் சிறுபோக நெற்செய்கைகளை மேற்கொண்டு வருகின்றனர்.

அத்துடன் முப்பதுக்கு மேற்பட்ட நன்னீர் மீன்பிடித் தொழிலாளர்களும் தங்களது வாழ்வாதாரத் தொழிலை முன்னெடுத்து வருகின்றனர்.

மேற்படி குளமானது கடந்த 35 வருடங்களுக்கு மேலாக புனரமைக்கப்படாத நிலையில் அதன் அணைக்கட்டுச் சேதமடைந்து ஆபத்தான நிலையில் காணப்பட்டதுடன் குளத்தில் முழுமையாக நீர் தேங்கும் போது ஏற்படும் குளம் உடைப்பெடுக்ககூடிய ஆபத்தான கட்டங்களில் விவசாயிகள் பொது மக்கள் மற்றும் நீர்ப்பாசனத் திணைக்களத்தினர் இணைந்து குளத்தின் அணைக் கட்டுப் பகுதியை பாதுகாக்கின்ற நடவடிக்கைகளில் ஈடுபட்டனர்.

இக்குளத்தின் கீழான விவசாயிகள் பொதுமக்கள் நீர்ப்பாசனத்திணைக்களம் என்பன இக்குளத்தினை புனரமைத்து தருமாறு தொடர்ச்சியாக கோரிக்கைகளை முன்வைத்தனர்.


தற்போது மாகாண குறித்தொதுக்கப்பட்ட அபிவிருத்தி நிதியின் கீழ் சுமார் 40 மில்லியன் ரூபாய் செலவில் இரண்டு வேலைத் திட்டங்களும் மீண்டு வரும் செலவினத்தின் மூலம் 15 மில்லியன் ரூபாய் செலவில் மேலும் ஒரு வேலைத் திட்டமாக 55 மில்லியன் ரூபாய் செலவில் புனரமைப்பு பணிகள் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன. இதேவேளை அடுத்த ஆண்டில் குளத்தின் முழுமையான புனரமைப்புப் பணிகள் 720 மில்லியன் ரூபாய் செலவில் முன்னெடுக்கப்பட உள்ளதாகவும் நீர்ப்பாசனத்தின் களம் தெரிவித்துள்ளது. (8-315)

## புலமைப்பரிசில் பரீட்சை பெறுபேறுகள்

### யா/துன்னாலை வடக்கு மெதடிஸ்த மிஷன் தமிழ் கலவன் பாடசாலை, கரவெட்டி

பி.வர்மிகன்-154, கு.வர்சிகா-153, லோ.சோபிதன்-151, தி.கிருஷிகன்-140, வ.தேனிகா-133

# மருதனார்மடத்தில் கைஎழுத்துப் போராட்டம்



(யாழ்ப்பாணம்)

செம்மணி உள்ளிட்ட வடக்கு கிழக்கில் காணப்படும் மனித புதைகுழிகளுக்கும் நடைபெற்ற இனப்படுகொலைகளுக்கும் சர்வதேச நீதி கோரி யாழ்ப்பாணத்தில் நேற்று கையெழுத்து போராட்டம் முன்னெடுக்கப்பட்டது.

மாற்றத்திற்கான இளையோர் குரல் அமைப்பினால் யாழ்ப்பாணம் மருதனார்மடம் பகுதியில் முன்னெடுக்கப்பட்டது.

போராட்டத்தில் யாழ் மருதனார்மடம் வர்த்தகர்கள் சந்தை வியாபாரிகள் பொது மக்கள் எனப்பலரும் கலந்து கொண்டனர். (8-33)

# மந்துவில் படுகொலை
## 26 ஆவது ஆண்டு நினைவேந்தல்




(நெளுக்குளம்)

முல்லைத்தீவு மாவட்டத்தின் புதுக்குடியிருப்பு பிரதேச செயலக பிரிவிற்குட்பட்ட மந்துவில் சந்திக்கு அருகாமையில் 1999 ஆம் ஆண்டு செப்ரெம்பர் 15 ஆம் திகதி விமானப்படை விமானங்கள் நடத்திய மிலேச்சத்தனமான குண்டுத்தாக்குதலில் படுகொலை செய்யப்பட்ட அப்பாவி பொது மக்களுடைய 26 ஆம் ஆண்டு நினைவு நிகழ்வுகள் நேற்று தாயக மற்றும் புலம்பெயர் நினைவேந்தல் அமைப்பின் ஏற்பாட்டில் உணர்வுபூர்வமாக அனுஷ்டிக்கப்பட்டது.

24 அப்பாவி பொதுமக்கள் படுகொலை செய்யப்பட்டிருந்தனர். அதன் 26 ஆவது ஆண்டு வலிதீரா நினைவு மந்துவிலில் இறந்தவர்களின் உறவுகளாலும் மக்களாலும் சுடரேற்றி மலர்தூவி கண்ணீருடன் நினைவு கூரப்பட்டது.

குறித்த நினைவேந்தல் படுகொலை சம்பவம் இடம் பெற்ற மந்துவில் சந்தி வளாகத்தில் உணர்வுபூர்வமாக முன்னெடுக்கப்பட்டது

தாயக மற்றும் புலம்பெயர் நினைவேந்தல் அமைப்பின் தலைவர் த.லோகேஸ்வரன் தலைமையில் இடம்பெற்ற குறித்த நிகழ்வில் பாராளுமன்ற உறுப்பினர் துரைராசா ரவிகரன், புதுக்குடியிருப்பு பிரதேசசபை உறுப்பினர் சிவபாதம் குகநேசன், கரைதுறைப்பற்று பிரதேச சபை உறுப்பினர் ஞா.யூட் பிரசாத் தாய்த்தமிழ் பேரவையின் ஸ்தாபகர் ச.சத்தியரூபன், முன்னாள் பிரதேச சபை உறுப்பினர்கள் சமூக செயற்பாட்டாளர்கள், உயிரிழந்தவர்களின் உறவினர்கள் மற்றும் பொதுமக்கள் என பலரும் கலந்து கொண்டிருந்தனர். (8-299)



# வீட்டு நூலகத் தெரிவுப்போட்டி

(யாழ்ப்பாணம்)

சாவகச்சேரி நகராட்சி மன்றத்தின் மீசாலைப் பொது நூலகத்தின் ஏற்பாட்டில் தேசிய வாசிப்பு மாதத்தை முன்னிட்டு பொது நூலக எல்லைக்குள் வசிப்பவர்களுக்கான திறந்த மட்ட சிறந்த வீட்டு நூலகத் தெரிவுப் போட்டியை நடத்தவுள்ளது.

குறைந்தது நூறு புத்தகங்களையாவது தனது வீட்டு அலுமாரியில் வைத்து பராமரித்து வருபவர்கள் எதிர்வரும் 05/10/2025 ஆம் திகதிக்கு முன்னராக மீசாலைப் பொது நூலகத்தில் பதிவுகளை மேற்கொண்டு சிறந்த வீட்டு நூலகப் போட்டியில் பங்கெடுத்துக்கொள்ள முடியும் என நூலகர் தெரியப்படுத்தியுள்ளார். (8-30)

## அறுவடை செய்யப்பட்ட வெங்காயங்கள்
# வெள்ளத்தில் மூழ்கின

(கரணவாய்)

வடமராட்சி கிழக்கு குடத்தனைப் பகுதியில் கொட்டித் தீர்த்த கன மழை காரணமாக அறுவடை செய்யப்பட்ட வெங்காய பயிர்கள் வெள்ளத்தில் மூழ்கியுள்ளன.

தற்போது வடமராட்சி மற்றும் வடமராட்சி கிழக்கின் பல பகுதிகளிலும் வெங்காய அறுவடை நடைபெற்று வருகின்றது.

இந்நிலையில் அறுவடை செய்யப்பட்ட வெங்காயங்கள் உலரவிடப்பட்ட நிலையில் சில தினங்களாக கொட்டித் தீர்த்த கனமழை காரணமாக வெள்ளம் தேங்கி நிற்பதாலும் புரட்டிய வெங்காயங்களை உலர விட முடியாததாலும் விவசாயிகள் பெரும் துன்பத்தை எதிர்நோக்கியுள்ளனர்.

கடந்த ஆறு வருடங்களுக்கு முன்னரும் கொட்டித்தீர்த்த கனமழை காரணமாக படகின் மூலமே அறுவடை செய்யப்பட்ட வெங்காயங்களை விவசாயிகள் ஏற்றி வந்தமையும் இங்கு குறிப்பிடத்தக்கது.(8-60)

# மாட்டுவண்டிச் சவாரிப்போட்டி



(மன்னார்)

தமிழர்களின் பாரம்பரிய விளையாட்டுக்களில் ஒன்றான இரட்டை மாட்டு வண்டி சவாரி போட்டி நேற்று முன்தினம் ஞாயிற்றுக்கிழமை மாலை நானாட்டான் வாழ்க்கை பெற்றான் கண்டல் இரட்டை மாட்டு வண்டி சவாரித் திடலில் இடம்பெற்றது.

மன்னார் மாவட்ட மாட்டு வண்டி சவாரி சங்கத் தலைவர் சந்திரசேகரன் தலைமையில் இடம்பெற்றது. குறித்த போட்டியில் வடமாகாணத்தில் நான்கு மாவட்டங்களைச் சேர்ந்த காளைகள் மற்றும் உரிமையாளர்கள் போட்டியில் கலந்து கொண்டிருந்ததோடு, குறித்த போட்டியில் நூறுக்கும் மேற்பட்ட காளைகள் அழைத்து வரப்பட்டிருந்தது.

மிகவும் சிறப்பாக இடம் பெற்ற போட்டியில், A.B.பிரிவுகளில் கிளிநொச்சி மாவட்ட காளைகளும், C.D.E ஆகிய பிரிவுகளில் மன்னார் மாவட்டத்தைச் சேர்ந்த காளைகளும், வெற்றியீட்டியது.

வெற்றி பெற்ற காளைகளின் வெற்றியாளர்களுக்கு பெறுமதியான பரிசுகள் வழங்கி வைக்கப்பட்டது. (8-285)

## செல்வச்சந்நிதி ஆலயத்தில்
# தவறவிடப்பட்ட பொருட்களை பெற்றுக்கொள்ளலாம்

(யாழ்ப்பாணம்)

தொண்டைமானாறு ஸ்ரீ செல்வச்சந்நிதி ஆலய மகோற்சவ காலத்தில் தவறவிடப்பட்ட ஒரு பவுணுக்கு உட்பட்ட இரு நகைகள் மற்றும் பொருட்கள் கண்டெடுக்கப்பட்டு பருத்தித்துறை பிரதேச செயலக உற்சவ கால பணிமனையில் ஒப்படைக்கப்பட்டு, தற்போது பருத்தித்துறை பிரதேச செயலகத்தில் ஒப்படைக்கப்பட்டுள்ளன.

எனவே உரியவர்கள் தகுந்த ஆதாரம் காட்டி இம்மாதம் 30 ஆம் திகதிக்கு முன்னர் பிரதேச செயலகத்தில் பெற்றுக் கொள்ளலாம் என செயலாளர் ந.திருலிங்கநாதன் அறிவித்துள்ளார். (8)

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# 500 கோடி ரூபா பெறுமதியான சொத்துக்கள் இதுவரை முடக்கம்!

(கொழும்பு)

**இந்த ஆண்டில் இதுவரையில் சுமார் 500 கோடி ரூபா பெறுமதியான சொத்துக்கள் தற்காலிக அடிப்படையில் முடக்கப்பட்டுள்ளதாக அரசாங்கம் தெரிவித்துள்ளது.**

திட்டமிட்ட குற்றச் செயல்களுடன் தொடர்புடைய பாதாள உலகக்குழு உறுப்பினர்களது என சந்தேகிக்கப்படும் சொத்துக்களே அதிகளவில் இவ்வாறு முடக்கப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.

பொது பாதுகாப்பு அமைச்சர் ஆனந்த விஜயபால இந்த தகவல்களை வெளியிட்டுள்ளார்.

இவ்வாறு முடக்கப்பட்ட சொத்துக்களில் சில அரசியல்வாதிகளின் சொத்துக்களும் உள்ளடங்குவதாக அவர் தெரிவித்துள்ளார்.

அண்மையில் பாராளுமன்றில் நிறைவேற்றப்பட்ட குற்றச் செயல்களின் ஊடாக ஈட்டப்பட்ட சொத்துக்களை முடக்கும் சட்டத்தின் அடிப்படையில் இந்த சொத்துக்கள் முடக்கப்பட்டுள்ளதாக தெரிவித்துள்ளார்.

இந்த குற்றச்செயல்கள் தொடர்பில் விசாரணை நடத்தப்பட்டு வருவதாகவும் அவர் தெரிவித்துள்ளார்.

குற்றச் செயல்களுடன் தொடர்புடையவர்களது சொத்துக்களை பொறுப்பேற்று பராமரிப்பதற்காக விசேட அதிகார



சபையொன்றை உருவாக்குவதற்கும் நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட்டு வருவதாக தெரிவித்துள்ளார். (நி)

## குற்றச்செயல்களில் ஈடுபட்ட 15 பேர் கைது

(கொழும்பு)

நாடு முழுவதும் குற்றச் செயல்களில் நேரடியாக ஈடுபட்டதற்காக தேடப்பட்டு வந்த 15 பேரை இலங்கை பொலிஸார் கைது செய்துள்ளனர்.

இலங்கையில் போதைப் பொருள் மற்றும் குற்றச்செயல்களைத் தடுப்பதற்காக நேற்று நடத்தப்பட்ட பல நடவடிக்கைகளின் போது சந்தேக நபர்கள் கைது செய்யப்பட்டதாக பொலிஸார் தெரிவித்தனர்.

நேற்று முன்தினம் நடத்தப்பட்ட சோதனையின் போது மொத்தம் 27,654 நபர்கள் பரிசோதிக்கப்பட்டனர்.

அவர்களில், 15 பேர் குற்றங்களில் நேரடியாக ஈடுபட்டதற்காகவும், 674 பேர் சந்தேகத்தின் பேரிலும் கைது செய்யப்பட்டனர்.

பிடியாணை உத்தரவு பிறப்பிக்கப்பட்ட 220 பேரையும், திறந்த பிடியாணை பிறப்பிக்கப்பட்ட 155 பேரையும் பொலிஸார் கைது செய்தனர். (நி)

## இலங்கையின் பொருளாதார வளர்ச்சிக்கு பாராட்டுத் தெரிவித்த உலக வங்கி

(கொழும்பு)

உலகின் பல நாடுகள் பொருளாதார வளர்ச்சியை காண்பிக்க தவறியுள்ள போதிலும், இலங்கை அதனை செய்து காண்பித்துள்ளதாக உலக வங்கி பாராட்டு தெரிவித்துள்ளது.

2021, 2022, 2023 ஆம் ஆண்டுகளில் வங்குரோத்து அடைந்திருந்த இலங்கை இன்று இந்நிலைமையை அடைந்துள்ளதாகவும் உலக வங்கி குறிப்பிட்டுள்ளது. மக்களின் வருமானம் அதிகரிக்கப்பட்டுள்ளதோடு செலவுகளும் குறைந்துள்ளன.

இதற்கமையவே, கடந்த காலங்களில் மக்களுக்கு வழங்கிய வாக்குறுதிக்கமைய ஜனாதிபதிகளுக்குரிய சிறப்புரிமைகளை நீக்குவதற்கான சட்டம் நிறைவேற்றப்பட்டுள்ளது.

சாதாரண பெரும்பான்மையுடன் நிறைவேற்றக் கூடிய சட்டம் மூன்றில் இரண்டு பெரும்பான்மையுடன் நிறைவேற்றப்பட்டுள்ளது.

ஐக்கிய மக்கள் சக்தியினர் இதற்கு வாக்களித்திருக்க முடியும். ஆனால் அவர்கள் அதனை செய்யவில்லை. மாறாக இந்த விடயத்தை மறைப்பதற்காக மறுநாள் சபையில் வேறொரு விடயத்துக்காக கூச்சலிட்டுக் கொண்டிருந்தனர்.

அதேபோன்று வெகுவிரைவில் பாராளுமன்ற உறுப்பினர்களுக்கான ஓய்வூதியத்தை நிறுத்துவதற்கான சட்டமும் நிறைவேற்றப்படும்.

இதற்கான சட்ட வரைபு தயாரிக்கப்பட்டு வருவதாகவும் அமைச்சர் நளிந்த ஜயதிஸ்ஸ தெரிவித்துள்ளார். (நி)

## லஞ்சீற்றுக்கு பதில் வாழை இலை கூட்டத்தில் தீர்மானம்

(அராலி)

பருத்தித்துறை நகரசபைக்கு உட்பட்ட உணவகங்களில் எதிர்வரும் முதலாம் திகதி முதல் லஞ்சீற் பயன்படுத்துவதை நிறுத்துவதென்று பருத்தித்துறை நகரசபையும் பருத்தித்துறை நகர வர்த்தகர்களும் தீர்மானித்துள்ளனர்.

பருத்தித்துறை நகரசபை மண்டபத்தில் நகரசபை தவிசாளர் வின்சன்டீபோல் டக்ளஸ் போல் தலைமையில் நகர வர்தகர்களுடன் இடம்பெற்ற கூட்டத்திலேயே இந்த தீர்மானம் எடுக்கப்பட்டது.

எதிர்வரும் முதலாம் திகதியிலிருந்து உணவகங்களில் பொலித்தீன் பயன்படுத்துவதில்லையென்றும் அதற்கு பதிலாக வாழையிலையை பயன்படுத்துவதெனவும் எதிர்வரும் ஜனவரி முதலாம் திகதியிலிருந்து பொலித்தீன் பயன்பாட்டை முற்றுமுழுதாக நிறுத்துவதென்றும் முடிவெடுக்கப்பட்டுள்ளது.

இதேவேளை உணவகங்களில் உணவுப்பொதி செய்வதற்கு ஜனவரி முதலாம் திகதி வரை அனுமதிப்பதென்றும் தீர்மானிக்கப்பட்டுள்ளது. (8-104)

## மாணவர்களை இலக்கு வைத்து ஈ-சிகரெட் விற்பனை

(கம்பஹா)

கம்பஹா - திவுலப்பிட்டிய பிரதேசத்தில் பாடசாலை மாணவர்களை இலக்கு வைத்து இலத்திரனியல் சிகரட்டுகளை விற்பனை செய்து வந்த பெண் ஒருவர் திவுலப்பிட்டிய பொலிஸ் நிலைய ஊழல் தடுப்பு பிரிவினரால் கைதுசெய்யப்பட்டுள்ளார்.

திவுலப்பிட்டிய பொலிஸ் நிலைய ஊழல் தடுப்பு பிரிவினருக்கு கிடைத்த தகவலின் பேரில் மேற்கொள்ளப்பட்ட சுற்றிவளைப்பில் சந்தேக நபரான பெண் திவுலப்பிட்டிய பிரதேசத்தில் உள்ள பாடசாலை ஒன்றுக்கு அருகில் வைத்து கைது செய்யப்பட்டுள்ளார்.

கைதுசெய்யப்பட்டவர் கம்பஹா - வெயாங்கொடை பிரதேசத்தைச் சேர்ந்த 32 வயதுடைய பெண் ஆவார்.

சந்தேக நபரான பெண் நீண்ட காலமாக இலத்திரனியல் சிகரட்டுகளை விற்பனை செய்து வந்துள்ளதாக பொலிஸ் விசாரணையில் தெரியவந்துள்ளது.

இந்நிலையில், சந்தேக நபரான பெண் ஒவ்வொரு பாடசாலை மாணவர்களுக்கும் 5500 ரூபா முதல் 7000 ரூபா வரை இலத்திரனியல் சிகரட்டுகளை விற்பனை செய்து வந்துள்ளதாக பொலிஸ் விசாரணையில் தெரியவந்துள்ளது.

வெளிநாட்டில் உள்ள கணவர் தனக்கு இந்த இலத்திரனியல் சிகரட்டுகளை அனுப்பி வைத்ததாக சந்தேக நபரான பெண், பொலிஸாரிடம் கூறியுள்ளார்.

இது தொடர்பான மேலதிக விசாரணைகளை திவுலப்பிட்டிய பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர். (நி)

## குத்துச்சண்டை ஜாம்பவான் ரிக்கி ஹாட்டன் காலமானார்



முன்னாள் குத்துச்சண்டை உலக சாம்பியனான ரிக்கி ஹாட்டன் தனது 46 வயதில் காலமானார்.

கிரேட்டர் மான்செஸ்டரில் உள்ள அவரது வீட்டில் ஹாட்டன் இறந்து கிடந்தது கண்டு பிடிக்கப்பட்டதாக பிரித்தானியாவின் பத்திரிகையாளர் சங்கம் தெரிவித்துள்ளது.

இந்த மரணம் சந்தேகத்திற்குரியதாக கருதப்படவில்லை என்று கிரேட்டர் மான்செஸ்டர் பொலிஸார் உறுதிபடுத்தியுள்ளனர்.

குத்துச்சண்டை உலகம் அவரது இழப்புக்கு இரங்கல் தெரிவித்து வருகின்றன.

2012 ஆம் ஆண்டு வியாசெஸ்லாவ் சென்சென்கோவிடம் தோல்வியடைந்ததிலிருந்து ஒரு தசாப்த கால ஓய்வுக்குப் பின்னர், டிசெம்பர் மாதம் டுபாயில் ஈசா அல்டாவுக்கு எதிராக ஒரு ஆச்சரியமான மறுபிரவேசப் போட்டி திட்டமிடப்பட்டதாக ஹாட்டன் அறிவித்த இரண்டு மாதங்களுக்குப் பின்னர் அவரது மரணம் நிகழ்ந்துள்ளது.

தனது புகழ்பெற்ற வாழ்க்கை முழுவதும், ஹாட்டன் லைட்-வெல்டர்வெயிட் மற்றும் வெல்டர்வெயிட்டில் உலக பட்டங்களை கைப்பற்றினார். (நி)

**இந்திய சாஸ்திரியார் வருகை**

சிங்கப்பூர், மலேசியா மற்றும் பல நாடுகளில் புகழ் ஓம் சக்தி அருள்வாக்கு பெற்ற **இரத்தின சாமி** சாஸ்திரியார் அவர்கள் யாழ் வருகை. ஜாதகம், கைரேகை, எண் கணிதம் மற்றும் தொழில் முன்னேற்றம் இன்மை, புதிய தொழில் தொடங்க, திரு மணத்தடை, வாழ்வில் தோல்வி, குடும்பத்தில் பிரச்சினை வெளிநாடு செல்ல தடை, கல்வியில் தடை, குழந்தை பாக்கியம் மற்றும் எந்த பிரச்சினைக்கும் நேரில்.

தொடர்புகளுக்கு-**076 682 7368**
No.**139**, Main Street Jaffna.
யாழ். நீதிமன்றத்துக்கு அருகாமையில்
(முன்பதிவு செய்து வரவும்)
(5416)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பாரதம்

## இந்தியா - ரஷ்யா உறவுகளை சீர்குலைக்கும் முயற்சிகள் யாவும் தோல்வியடையும்

### மொஸ்கோ தெரிவிப்பு



(மொஸ்கோ)

புதுடில்லியுடனான உறவுகளுக்கு தீங்கு விளைவிக்கும் எந்தவொரு முயற்சியும் தோல்வியடையும் என்று வலியுறுத்திய ரஷ்ய வெளிவிவகார அமைச்சு, மொஸ்கோவுடனான தனது ஒத்துழைப்பைத் தொடர்ந்ததற்காக இந்தியாவைப் பாராட்டியது.

ரஷ்ய எண்ணெயை தொடர்ந்து வாங்குவதற்காக இந்தியப் பொருட்களுக்கு அமெரிக்காவைப் போல் வரிகளை விதிக்க ட்ரம்ப், ஏனைய நாடுகள் மீது அழுத்தம் கொடுத்து வரும் நிலையில் ரஷ்யாவின் இந்த அறிக்கை வந்துள்ளது.

ரஷ்ய வெளிவிவகார அமைச்சு நேற்று முன்தினம் ஞாயிற்றுக்கிழமை அரசு ஊடகமான RT இற்கு அளித்த அறிக்கையில், மொஸ்கோவிற்கும் டில்லிக்கும் இடையிலான உறவுகள் "நிலையாகவும் நம்பிக்கையுடனும் முன்னேறி வருகின்றன", மேலும் "இந்த செயல்முறையைத் தடுக்கும் எந்தவொரு முயற்சியும் தோல்வியடையும்" என்றும் தெரிவித்தது.

ரஷ்யாவின் எண்ணெய் வாங்குவதை நிறுத்துமாறு அமெரிக்கா மற்றும் நேட்டோ நாடுகளின் தொடர்ச்சியான அழுத்தங்களுக்கு முகங்கொடுத்து இந்தியா உறுதியாக நின்றதற்கும், அச்சுறுத்தல்கள் இருந்த போதிலும் அதன் உறுதிப்பாடுகளைத் தொடர்வதற்கும் அது பாராட்டியது.

இரு நாடுகளும் பொது மக்கள், இராணுவ உற்பத்தி, மனிதர்கள் கொண்ட விண்வெளி பயணங்கள், அணுசக்தி மற்றும் ரஷ்ய எண்ணெய் ஆய்வில் இந்திய முதலீடுகள் ஆகியவற்றை உள்ளடக்கிய கூட்டுத் திட்டங்களில் ஈடுபட்டுள்ளன.

கடந்த மாதம், பெரும்பாலான இந்தியப் பொருட்கள் மீது அமெரிக்கா கடுமையான வரிகளை விதித்தது.

இதில் 25% அடிப்படை வரி மற்றும் ரஷ்யாவின் எண்ணெய் மற்றும் பாதுகாப்பு உபகரணங்களை இந்தியா வாங்கியது தொடர்பான கூடுதல் 25% 'அபராதம்' ஆகியவை அடங்கும்.

உக்ரைன் மோதலுக்கு இந்தியா மறைமுகமாகத் தூண்டிவிடுவதாக ட்ரம்ப் நிர்வாகம் குற்றம் சாட்டியது. இந்தக் குற்றச்சாட்டை இந்தியா நியாயமற்றது என்று பலமுறை நிராகரித்துள்ளது.

இருதரப்பு வர்த்தக ஒப்பந்தத்தை எட்டுவதற்கான முயற்சிகள் முடங்கியுள்ள நிலையில், இந்த வரிகள் விதிக்கப்பட்டுள்ளமையும் குறிப்பிடத்தக்கது. (நி)

## அமெரிக்க ஜனாதிபதி ட்ரம்ப் ஐக்கிய இராஜ்ஜியத்திற்கு விஜயம்



(வோஷிங்டன்)

அமெரிக்க ஜனாதிபதி டொனால்ட் டரம்ப் இந்த வாரம் ஐக்கிய இராஜ்ஜியத்துக்கு உத்தியோகபூர்வ விஜயம் மேற்கொள்ளவுள்ளார்.

மன்னர் மூன்றாம் சார்ல்ஸுடன் விமானம் மற்றும் வண்டிப் பயணம் முதல் வரலாற்று சிறப்புமிக்க விண்ட்சர் கோட்டையில் ஒரு பிரமாண்டமான அரசு விருந்து வரையான நிகழ்வுகளில் அவர் இதன்போது பங்கெடுக்கவுள்ளார்.

வர்த்தகம், வரிகள் மற்றும் உக்ரைன் போர் ஆகியவற்றை மையமாகக் கொண்ட பேச்சுவார்த்தைகளுக்காக இங்கிலாந்து பிரதமர் கெய்ர் ஸ்டார்மரையும் இதன்போது அமெரிக்க ஜனாதிபதி சந்தித்து பேசவுள்ளார்.

2019 ஆம் ஆண்டு தனது முதல் பதவிக் காலத்தில், இரண்டாம் எலிசபெத் மகாராணியைச் சந்தித்தபோது, ட்ரம்ப் தனது முந்தைய ஐக்கிய இராஜ்ஜியத்துக்கான அரசுப் பயணம் குறித்து அடிக்கடி பாராட்டியுள்ளார்.

இந்த நிலையில் புதிய விஜயம் மூலம் இரண்டாவது அரசுப் பயணம் மேற்கொள்ளும் முதல் அமெரிக்க ஜனாதிபதியாக அவர் மாறுவார்.

குடியேற்றக் கொள்கைக்கு எதிர்ப்பு தெரிவித்து இங்கிலாந்தில் மேற்கொள்ளப்பட்டு வரும் போராட்டங்களுக்கு மத்தியில் ட்ரம்பின் இந்த விஜயம் அமையவுள்ளது. (நி)

## காசா மீதா...

## தீவிரப்படுத்...

### * 53 பேர் உயி...

### * 16 கட்டடங்க...

(ஜெருசலேம்)

**காசா மீது நேற்றையதினம் இஸ்... தாக்குதல்களில் 53 பேர் உயிரிழந்... கட்டடங்கள் சேதமாக்கப்பட்டுள்ளன.**

காசா நகரத்தின் மீது இஸ்ரேல் தனது குண்டு வீச்சுத் தாக்குதலை தீவிரப்படுத்தியுள்ளதாகச் சர்வதேச ஊடகங்கள் செய்தி வெளியிட்டுள்ளன.

தாக்குதலின் போது, மூன்று கோபுரங்கள் உட்பட 16 கட்டடங்கள் தரைமட்டமாகியுள்ளன.

மேலும், இந்தத் தாக்குதல்களில் பல மக்கள் பாதிக்கப்பட்டுள்ளனர்.

வடக்கு நகர்ப்புற மையத்தைக் கைப்பற்றி அதன் மக்களை இடம்பெயரச் செய்வதற்கான தாக்குதலை இஸ்ரேலியப் படைகள் தீவிரப்படுத்தியுள்ள நிலையில், காசா பகுதியில் 53 பாலஸ்தீனியர்கள் கொல்லப்பட்டுள்ளனர்

இஸ்ரேலின் போர் தொடங்கியதிலிருந்து, காசாவில்

## 'நியூயோர்க் பிரகடனம்' 142 நாடுகள் ஆதரவு

(ஜெனீவா)

பாலஸ்தீனப் பிரச்சினைக்கு அமைதியான தீர்வு காண்பது மற்றும் இரு-மாநில தீர்வை செயற்படுத்துவது குறித்த நியூயோர்க் பிரகடனத்தை ஆதரிக்கும் தீர்மானத்தை ஐ.நா. பொதுச் சபை ஏற்றுக்கொண்டுள்ளது.

நியூயோர்க்கில் உள்ள ஐக்கிய நாடுகள் சபையின் பொதுச் சபையில், காசா போருக்கு அமைதியான தீர்வை ஏற்படுத்தும் "நியூயோர்க் பிரகடனம்" மீது கடந்த வெள்ளிக்கிழமை வாக்கெடுப்பு நடைபெற்றது.

வாக்கெடுப்பின் முடிவுகளின் படி, தீர்மானத்திற்கு ஆதரவாக 142 நாடுகள் வாக்களித்திருந்தன. எதிராக 10 நாடுகள் வாக்களித்திருந்தன. 12 நாடுகள் வாக்கெடுப்பிலிருந்து விலகியிருந்தன.




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வெளிநாடு



# ான தாக்குதலை

# ந்தியது இஸ்ரேல்!

## யிரிழப்பு

## வகள் தரைமட்டம்

**ஸ்ரேல் நடத்திய**
**ழந்ததுடன், பல**
**ன.**


பசியினால் உயிரிழந்தவர்களின் எண்ணிக்கை 422 ஆக உயர்ந்துள்ளதாக அந்த நாட்டு சுகாதார அமைச்சு தெரிவித்துள்ளது.

காசா நகரில், இஸ்ரேலிய இராணுவம் தெற்கு ரெமால் சுற்றுப்புறத்தில் உள்ள அல்-கவ்தர் கோபுரத்தை இலக்குவைத்து, இரண்டு மணி நேரம் ஏவுகணைத் தாக்குதல்களை நடத்தியுள்ளது.

இடைவிடாத குண்டு வீச்சு தாக்குதல்களால் பல்லாயிரக்கணக்கானவர்கள் தப்பி ஓடியுள்ளனர். (நி)



பிரான்ஸ் மற்றும் சவுதி அரேபியாவால் முன்வைக்கப்பட்ட இந்த முன்மொழிவு, பாலஸ்தீனப் பிரச்சினைக்கு அமைதியான தீர்வு காண "இரு- மாநில தீர்வை" செயற்படுத்த வேண்டும் என்று வலியுறுத்துகிறது. இது காசா போரை முடிவுக்குக் கொண்டுவர கூட்டு முயற்சிகள் அவசியம் என்றும், அதன் மூலமே நியாயமான, நீடித்த தீர்வு சாத்தியம் என்றும் கூறுகிறது.




அதே நேரம், இந்தத் தீர்மானம், ஒக்டோபர் 7. 2023 அன்று இஸ்ரேல் மீது ஹமாஸ் நடத்திய தாக்குதல்களைக் கண்டிக்கிறது.

ஹமாஸ் அனைத்து பணயக் கைதிகளையும் விடுவிக்கவும், காசாவில் அதிகாரத்தைக் கைவிட்டு, ஆயுதங்களை பாலஸ்தீன அதிகாரசபையிடம் ஒப்படைக்கவும் கோருகிறது.

ஐ.நா.வின் தகவலின்படி, 2023 முதல் காசா மீதான இஸ்ரேலியத் தாக்குதல்களில் 64,750 இற்கும் அதிகமான பாலஸ்தீனியர்கள் கொல்லப்பட்டுள்ளனர். இவர்களில் பெரும்பாலானோர் பெண்கள் மற்றும் குழந்தைகள். அத்துடன் பட்டினியால் நூற்றுக்கணக்கானோர் உயிரிழந்துள்ளதாகவும் ஐ.நா. தெரிவித்துள்ளது. (நி)

# இன ரீதியான மிரட்டலை பொறுத்துக்கொள்ள மாட்டோம்

## பேரணிக்கு பிரிட்டன் பிரதமர் எதிர்ப்பு



(லண்டன்)

இன ரீதியான மிரட்டலை பொறுத்துக்கொள்ள மாட்டோம் என புலம்பெயர்ந்தோருக்கு எதிராக நடந்த பேரணிக்கு பிரிட்டன் பிரதமர் கெயர் ஸ்டார்மர் எதிர்ப்பு தெரிவித்தார்.

ஐரோப்பிய நாடான பிரிட்டனில், வெளிநாடுகளில் இருந்து வந்து குடியேறுபவர்களுக்கு எதிராக, அந்நாட்டின் தீவிர வலதுசாரி ஆர்வலரான டாமி ராபின்சன் தலைமையில், "யுனைட் தி கிங்டம்" எனும் பெயரில் லண்டனில் பேரணி நடந்தது.

இப் பேரணியில், 1.50 இலட்சத்துக்கும் மேற்பட்டோர் கலந்து கொண்டனர்.

பேரணியில் போராட்டக்காரர்கள் மற்றும் பொலிஸார் இடையே ஏற்பட்ட மோதலில், 26 போலிசார் காயமடைந்தனர். இது தொடர்பாக, 25 பேர் கைது செய்யப்பட்டு, விசாரணை நடந்து வருகிறது.


இது தொடர்பாக பிரிட்டன் பிரதமர் கெயர் ஸ்டார்மர் கூறியதாவது, இன ரீதியான மிரட்டலை பொறுத்துக் கொள்ள மாட்டோம்.

பிரிட்டன் சகிப்புத் தன்மை, பன்முகத்தன்மை மற்றும் மரியாதை ஆகியவற்றின் அடிப்படையில் கட்டமைக்கப்பட்ட ஒரு நாடு. அமைதியான முறையில் போராட்டம் நடத்த மக்களுக்கு உரிமை உண்டு. அது நமது நாட்டின் மதிப்புகளுக்கு அடிப்படையானது.

ஆனால், பொலிஸார் தங்கள் வேலையைச் செய்வதை தடுப்பதோ அல்லது அவர்களைத் தாக்குவதையோ நாங்கள் ஆதரிக்க மாட்டோம். நமது கொடி நமது பன்முகத் தன்மையைக் குறிக்கிறது. இவ்வாறு அவர் தெரிவித்துள்ளார். (நி)

# உடைந்த எலும்புகளை ஒட்ட வைக்கும் பசை

## கண்டுபிடித்து அசத்திய சீன விஞ்ஞானிகள்



(பீஜிங்)

உடைந்த எலும்புகளை சரிசெய்ய "போன் க்ளூ" எனும் புதிய எலும்பு பசையை சீன விஞ்ஞானிகள் கண்டுபிடித்துள்ளனர்.

சீனாவின் கிழக்குப் பகுதியில் உள்ள ஜெஜியாங் மாகாணத்தைச் சேர்ந்த எலும்பு அறுவை சிகிச்சை நிபுணர் லின் சியான்பெங் தலைமையிலான ஆராய்ச்சியாளர்களால் இந்த புதிய எலும்பு பசை கண்டுபிடிக்கப்பட்டுள்ளது.


இதற்கு "போன் - 2" என பெயரிடப்பட்டுள்ளது.

இதன் மூலம், உடைந்த எலும்புத் துண்டுகளை இரண்டில் இருந்து மூன்று நிமிடங்களில் ஒட்ட வைக்க முடியும் என்றும், இதனால் சிக்கலான அறுவை சிகிச்சைகளுக்கான நேரம் கணிசமாகக் குறையும் எனவும் கூறப்படுகிறது.

தற்போது பயன்படுத்தப்படும் உலோக உள்வைப்புகளுக்குப் பதிலாக இது ஒரு புரட்சிகரமான மாற்றாக அமையும் எனவும் எதிர்பார்க்கப்படுகிறது. (நி)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 2029 இற்குள்
## 50 பல்நோக்கு போக்குவரத்து



(கொழும்பு)

2029 ஆம் ஆண்டுக்குள் குறைந்தது 50 பல்நோக்கு போக்குவரத்து நிலையங்களை நிறுவ அமைச்சு எதிர்பார்க்கிறது என்று போக்குவரத்து அமைச்சர் பிமல் ரத்நாயக்க தெரிவித்துள்ளார்.

அத்துடன் 2026 ஆம் ஆண்டுக்குள் கொழும்பில் 15 பல்நோக்கு போக்குவரத்து நிலையங்களை நிறுவுவதற்கான திட்டங்கள் நடைபெற்று வருவதாகவும் அமைச்சர் குறிப்பிட்டார்.

பேருந்து, ரயில் மற்றும் டாக்ஸி ஆகியவற்றை ஒரே இடத்தில் பெறக்கூடிய வகையில் பல்வகை போக்குவரத்து மையங்கள் கட்டமைக்கப்படும் என்றும் அவர் விளக்கினார்.

கொழும்பு உட்பட மேலும் பல பேருந்து நிலையங்களை மேம்படுத்துவதே அமைச்சின் நோக்கம் என்று அமைச்சர் ரத்நாயக்க மேலும் குறிப்பிட்டார்.

புறக்கோட்டையில் உள்ள கொழும்பு மத்திய பேருந்து நிலையத்தின் நவீனமயமாக்கல் பணிகளைத் தொடங்கி வைக்கும் நிகழ்வில் உரையாற்றும் போதே போக்குவரத்து அமைச்சர் இந்தக் கருத்துக்களைத் தெரிவித்தார்.

ஜனாதிபதி அநுரகுமார திசாநாயக்கவின் தலைமையில் இந்த திட்டம் தொடங்கப்பட்டது.

புறக்கோட்டை மத்திய பேருந்து நிலையம் 'க்ளின் ஸ்ரீலங்கா' தேசிய திட்டத்தின் கீழ் ரூ. 425 மில்லியன் மதிப்பீட்டில் புதுப்பிக்கப்பட்டு வருகிறது.

மேலும் இது 8 மாதங்களில் நிறைவடையும் என்று எதிர்பார்க்கப்படுகிறது. (நி)


# கல்யாணமாலை
## சர்வதேச இலவச திருமண சேவை

### இவர்களுக்கு மணமகள் தேவை

பிறப்பு: 1984 இந்து
நட்சத்திரம்: ரேவதி
கி.பா: 25 3/4
உயரம்: 5'2"
தகைமை/தொழில்: A/L, தபால் ஊழியர்
எதிர்பார்ப்பு: தகுதியான பெண்
தொ.இ: B/16041

பிறப்பு: 1991 இந்து
நட்சத்திரம்: ரேவதி
5 இல் சூரி செவ்
கி.பா: 24
உயரம்: 5"5"
தகைமை/தொழில்: Diploma, GS
எதிர்பார்ப்பு: அரச வேலை
தொ.இ: B/16043

பிறப்பு: 1982 இந்து
நட்சத்திரம்:பூராடம்
கி.பா: 19 1/2
உயரம்:5'4"
தகைமை/தொழில்:Assistant Sales Manager
எதிர்பார்ப்பு: தகுதியான பெண்
தொ.இ: B/16044

பிறப்பு: 1991 இந்து
நட்சத்திரம்: சித்திரை
கி.பா: 3 1/4
உயரம்: 5'6"
தகைமை/தொழில்: A/L, Work(Gov)
எதிர்பார்ப்பு: உத்தியோகம்
தொ.இ: B/16045

பிறப்பு: 1984 இந்து
நட்சத்திரம்: உத்தராடம்
1 இல் செவ்
கி.பா: 51
உயரம்: 6"
தகைமை/தொழில்: Degree, Australia
எதிர்பார்ப்பு: வெளிநாடு
தொ.இ: B/16047

### இவர்களுக்கு மணமகன் தேவை

பிறப்பு: 1997 இந்து
நட்சத்திரம்: சித்திரை
கி.பா: 48
உயரம்: 5'4"
தகைமை/தொழில்: BSc, LDI
எதிர்பார்ப்பு: அரச உத்தியோகம்
தொ.இ: G/16066

பிறப்பு: 1989 இந்து
நட்சத்திரம்: புனர்பூசம்
7 இல் சூரி செவ்
உயரம்: 5'3"
தகைமை/தொழில்: AAT, Accountant (pvt)
எதிர்பார்ப்பு: Any Work
தொ.இ: G/16067

பிறப்பு: 1999 இந்து
நட்சத்திரம்:உத்தரம்
கி.பா: 39 1/2
உயரம்: 5'4"
தகைமை/தொழில்: College, Teacher
எதிர்பார்ப்பு: அரச உத்தியோகம்
தொ.இ: G/16068

பிறப்பு: 1996 இந்து
நட்சத்திரம்: அச்சுவினி
உயரம்: 5'3"
தகைமை/தொழில்: A/L
எதிர்பார்ப்பு : தகுதியான ஆண்
தொ.இ: G/16070

பிறப்பு: 1992 இந்து
நட்சத்திரம்: சதயம்
கி.பா: 09
உயரம்: 5'5"
தகைமை/தொழில்: A/L
எதிர்பார்ப்பு : விவாகரத்தானவர்கள் தகுதியான ஆண்
தொ.இ: G/16072

இல. 144, பிறவுண் வீதி, யாழ்ப்பாணம்
தொடர்பு:- 021 720 1005, 076 097 3120
E-mail:- kalyanamalai.jaffna@gmail.com
அலுவலக நேரம்:- காலை 9 மணி தொடக்கம் மாலை 4.45 மணிவரை
விடுமுறை தினம்:- ஞாயிற்றுக்கிழமை
பதிவுக்கட்டணம் 4000 ரூபாய் மட்டும்


# இன்று ஒரு தகவல் 444

தென்கச்சி கோ.சுவாமிநாதன்



## அனைவரும் சமம்

ஒரு சிகை அலங்காரக் கூடம்.

ரொம்ப சுறுசுறுப்பா எல்லாரும் வேலை செய்து கொண்டிருக்கிறார்கள்.. முடிவெட்ட வந்திருக்கிறவர்கள் நிறையப்பேர். எல்லாரும் வரிசையாக உட்கார்ந்திருக்கிறார் கள்.அந்த சமயத்திலே திடீர் என்று கதவைத் திறந்து கொண்டு ஒருவர் உள்ளே வந்தார். அவர் ஒரு பெரிய மனிதர். அவரும் முடிவெட்டுவதற்காகத் தான் உள்ளே வந்திருக்கிறார்.

அவரைப் பார்த்தவுடனே அங்கே வரிசையிலே உட்கார்ந்திருந்தவர்கள் எல்லாரும் எழுந்து அவரிடம் வந்து விட்டார்கள். அவரை சுற்றி நின்றுகொண்டிருந்தார்கள்..

"எப்படி இருக்கிறீர்கள்... நல்லா இருக்கிறீர்களா.. என்று விசாரித்தார்கள்.

எல்லாம் முடிந்ததும் வந்தவர் கேட்டார்:

"வரிசையிலே கடைசியா இருக்கிறவர் யார்" என்று கேட்டார். "ஏன்?" என்று கேட்டார்கள்.

தான் அதற்கு அடுத்த படியாக உட்கார வேண்டும் அதற்காகத் தான் கேட்டேன்" என்றார்.

உடனே அங்கே இருந்தவர்கள் சொன்னார்கள்.

"நீங்கள் வரிசையிலே காத்திருக்கக்கூடாது நீங்க அரசாங்கத்தின் தலைவர் உங்களுக்கு நேரம் முக்கியம் அதனாலே நீங்கள் முன்னாடி போங்கள்" என்று சொன்னார்கள்

ஆனால் அவர் அதைக் கேட்கவில்லை.

"தோழர்களே! உங்கள் கருத்துக்கு ரொம்ப நன்றி! எல்லாரும் வரிசையாகத்தான் வர வேண்டும். அதுதான் முறை வரிசையிலே வரவேண்டும் என்கின்ற நடைமுறையை நானும் பின்பற்ற விரும்புகிறேன்... நாம் எல்லாரும் சமமானவர்கள் என்றார்.

இப்படிச் சொல்லிட்டு.. வரிசையிலே கடைசியாக இருந்த ஒரு நாற்காலியிலே போய் உட்கார்ந்தார். தன் சட்டைப்பையிலே இருந்த ஒரு செய்தித்தாளை எடுத்தார். படிக்க ஆரம்பித்து விட்டார்.

ஆனால் அங்கே இருந்தவர்களாலே இதைப் பார்த்துக்கொண்டு சும்மா இருக்க முடியவில்லை. ஒருத்தர் எழுந்து வந்தார்.

"ஐயா.. இப்போது என்னுடைய முறை வந்துள்ளது.. உங்களை இங்கே காத்திருக்க வைக்கின்றதை விட ஐந்து ஆண்டுகளுக்குக் கூட முடிவெட்டிக் கொள்ளாமலே என்னாலே இருக்க முடியும்!" என்றார்.

இவர் நிமிர்ந்து பார்த்தார். அவர் மறுபடியும் சொன்னார்...

"ஐயா...நீங்கள் வரிசை முறையைத் தாண்டிப் போக விருப்பப்படலை... சரி... ஆனால் என்னுடைய முறையை மாற்றிக் கொடுக்க எனக்கு முழு உரிமை இருக்கின்றது. இதற்குப் பதிலாக உங்களுடைய கடைசி இடத்தை நான் எடுத்துக்கொள்கின்றேன்.. இதை நீங்கள் மறுக்க முடியாது!" என்றார்.

அங்கே இருந்த மற்றையவர்களும் இதை ஒரு மனதாக வற்புறுத்த ஆரம்பித்து விட்டார்கள்.

அந்தப் பெரிய மனிதர் பார்த்தார். சரி என்று கடைசியாக ஒப்புக் கொண்டார். அவர் யார் தெரியுமா?

அவர் தான் மாவீரர் லெனின். ரஷ்யாவிலே சிகை கிரெம்ளின் கூடத்துலேதான் இது நடந்தது. எல்லாரும் இந்நாட்டு மன்னர்கள் என்று வாயளவிலே பேசுகின்றதில் என்ன பிரயோஜனம்? நாம் எல்லாரும் சமம் என்கின்றதை நடைமுறையிலே கடைப்பிடித்து காட்டினவர்கள் கொஞ்சப்பேர் தான்!

அவர்களிலே ஒருத்தர்தான் தோழர் லெனின். வரிசையிலே நின்று வருகின்றது ஒரு சிறந்த தமிழ்ப் பண்பு, உயர்ந்த பண்பாடு.இன்றைக்குப் பல இடங்களிலே அது நமக்குத் தேவைப்படுகிறது. ஒரு ரேஷன் கடைவாசல். கடை திறக்கிறதற்கு முன்னாடியே எல்லாரும் வந்து வரிசையிலே நின்று கொண்டிருந்தார்கள். கடைசியா வந்த ஒருவர் வரிசையில் முன்னாடி போகின்றதற்கு முயற்சி செய்தார்.

ஏற்கனவே நின்றுகொண்டிருந்தவர்கள் அவரை முன்னாடி போவதற்கு விடவில்லை.

கடைசியாக போய் நில்லு என்று கத்தினார்கள். அதை அவர் காதுலே வாங்க வில்லை.. முண்டி அடித்துக்கொண்டு முன்னாடிபோக முயற்சி செய்தார். எல்லாரும் சேர்ந்து அவரை வலுக்கட்டாயமாக இழுத்துக் கொண்டு வந்து பின்னாடி நிறுத்திவிட்டார்கள். நிறுத்திவிட்டு சொன்னார்கள்

"இதோ பாருப்பா... நாங்க இருக்கிற வரைக்கும் நீங்கள் முன்னாடி போய் எதையும் வாங்க முடியாது... தெரிந்துகொள்" என்றார்கள்.

இப்ப அந்த ஆள் சொன்னார்:

நான் இங்கே பின்னாடி நிற்கின்ற வரைக்கும் நீங்களும் எதுவும் வாங்க முடியாது!" என்றார். "ஏன்" என்று கேட்டார்கள்.

"நான் தான் கடையைத் திறக்க வேண்டிய ஆள்.." அப்படி என்றார்," அவர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தியாக தீபம் திலீபனின் 38 ஆவது ஆண்டு நினைவேந்தல்

(யாழ்ப்பாணம்)

தியாக தீபம் திலீபனின் 38 வது நினைவேந்தல் நிகழ்வின் ஆரம்ப நாளான நேற்றுக் காலை தீவகம் நினைவேந்தல் குழுவின் ஏற்பாட்டில் யாழ் தீவகம் வேலணை வங்களாவடி சந்தியில் அமைந்துள்ள பொது நினைவுத் தூபியில் நடைபெற்றது.

இதன்போது பொதுச் சுடர் ஏற்றப்பட்டு தியாக தீபம் திலீபனின் திருவுருவப்படத்திற்கு மலர் மாலை அணிவிக்கப்பட்டு மலர் அஞ்சலியும் செலுத்தப் பட்டது.



குறித்த நினைவேந்தல் நிகழ்வில் வேலணைப் பிரதேசபையின் உறுப்பினர்கள் வர்த்தகர்கள் பொதுமக்கள் என பலரும் கலந்துகொண்டு அஞ்சலி செலுத்தினர். (8-33-104)




(தருமபுரம்)

தியாக தீபம் திலிபனின் 38 ஆண்டு நினைவு தின நிகழ்வுகள் கிளிநொச்சியில் அமைந்துள்ள தமிழரசு கட்சியின் அலுவலகத்தில் நேற்று இடம்பெற்றது.

இதன்போது பாராளுமன்ற உறுப்பினர் சிவஞானம் ஶ்ரீதரன் கலந்துகொண்டு அஞ்சலியை செலுத்தினார்

இதனை அடுத்து பிரதேச சபை உறுப்பினர்கள் தவிசாளர்கள் பொது அமைப்புக்களின் பிரதிநிதிகள் பொதுமக்கள் என பலரும் கலந்து கொண்டு தமது அஞ்சலியை செலுத்தினர். (8-316)

(நெளுக்குளம்)



தியாகதீபம் திலீபனின் 38ஆம் ஆண்டு நினைவேந்தல் முல்லைத்தீவு - கள்ளப்பாடு பகுதியில் அமைந்துள்ள வன்னிமாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் துரைராசா ரவிகரனின் மக்கள் தொடர்பகத்தில் நேற்று இடம்பெற்றது.

மாவீரர் ஒருவரின் தாயார் ஈகைச்சுடரினை ஏற்றி குறித்த நினைவேந்தலை ஆரம்பித்து வைத்தார். இந்த அஞ்சலி நிகழ்வுகளில் வன்னிமாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் துரைராசா ரவிகரன் கலந்துகொண்டதுடன், பொதுமக்கள் பலரும் கலந்து கொண்டிருந்தமையும் குறிப்பிடத்தக்கது.

தொடர்ந்து தியாகதீபம் திலீபனின் திரு உருவப்படத்திற்கு மலர்தூவி, சுடரேற்றப்பட்டு நினைவேந்தல் நிகழ்வுகள் உணர்வெழுச்சியுடன் முன்னெடுக்கப்பட்டன. (8-299)

## பாரிசில் தின நிகழ்வு

(யாழ்ப்பாணம்)

யா/கோண்டாவில் இந்து கல்லூரியின் பரிசில் தின நிகழ்வு நாளை புதன் கிழமை காலை 9 மணிக்கு பாடசாலை பிரதான மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

பாடசாலையின் அதிபர் ந.தயாளன் தலைமையில் இடம்பெறவுள்ள இந்நிகழ்வில் பிரதம விருந்தினராக யாழ்.பல்கலைக்கழக கலைப்பீட விரிவுரையாளர் ஆர்.சர்வேஸ்வரா கலந்து கொள்ளவுள்ளார். (3)

## சந்தைகளில் நேற்றைய விலை

| மரக்கறி | திருநெல்வேலி | மருதனார்மடம் | சாவகச்சேரி | நெல்லியடி | கிளிநொச்சி |
|---|---|---|---|---|---|
| | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா |
| கத்தரிக்காய் | 160 | 150 | 200 | 180 | 150 |
| உருளைக்கிழங்கு | 220 | 200 | 200 | 190 | 240 |
| பச்சைமிளகாய் | 100 | 100 | 150 | 170 | 200 |
| தக்காளி | 280 | 200 | 200 | 200 | 250 |
| மரவள்ளிக்கிழங்கு | 300 | 300 | 300 | 250 | 200 |
| கோவா | 250 | 250 | 250 | 180 | 250 |
| கரட் | 200 | 300 | 300 | 280 | 350 |
| பூசணி | 60 | 60 | 50 | 40 | 50 |
| புடோல் | 150 | 200 | 150 | 120 | 200 |
| வாழைக்காய் | 150 | 100 | 100 | 120 | 120 |
| சின்ன வெங்காயம் | 250 | 150-350 | 250 | 300 | 350 |
| பெரிய வெங்காயம் | 160 | 180 | 150 | 140 | 160 |
| பாகற்காய் | 400 | 500 | 400 | 600 | 450 |
| வெண்டக்காய் | 150 | 150 | 150 | 120 | 300 |
| கருணைக் கிழங்கு | 300 | 330 | 250 | 250 | 350 |
| பயற்றங்காய் | 300 | 280 | 300 | 350 | 400 |
| லீக்ஸ் | 250 | 200 | 300 | 200 | 200 |
| பீற்றூட் | 100 | 100 | 200 | 80 | 150 |
| கறிமிளகாய் | 300 | 300 | 300 | 300 | 250 |
| முருங்கைக்காய் | 400 | 250 | 300 | 180 | 500 |
| போஞ்சி | 600 | 500 | 350 | 400 | 500 |
| கத்தரிதம்புள்ள | 100 | 140 | 300 | -- | 120 |
| கீரை – 1 பிடி | 100 | 60-120 | 150 | 80 | 100 |
| தேசிக்காய் | 1200 | 1200 | 600 | 1200 | 2000 |
| தேங்காய் (ஒன்று) | 180 | 200 | 150 | 230 | 160-220 |
| இராசவள்ளி | 800 | 500 | 600 | 800 | 1000 |
| வெங்காயப்பூ | 400 | 300 | 300 | 150 | 450 |
| முள்ளங்கி | 100 | 150 | 150 | 100 | 200 |
| பொன்னாங்காணி | 100 | 50 | 150 | 100 | 60 |
| வல்லாரை | 80 | 50 | 100 | 80 | 100 |
| ஈரப்பலா | 100 | 100 | 100 | 100 | -- |

# இராசிபலன்

16.09.2025
ஆவணி 31, செவ்வாய்க்கிழமை
தசமி பின்னிரவு 3.26 மணிவரை

திருவாதிரை முற்பகல் 10.51
சுப நேரம் 10.33 - 12.03 மணிவரை
இராகுகாலம் 3.03-4.33 மணிவரை

சந்திராஷ்டமம்
அனுசம், கேட்டை

வளவன்

**மேஷம்**
ஆதாயம்தரும் வேலையொன்றில் ஆர்வம் காட்டுவீர்கள், எடுத்த காரியங்களில் கண்ணும் கருத்துமாக இருப்பீர்கள், உறவினர்களின் ஒத்துழைப்புக்கள் கிடைக்கும் வாய்ப்புண்டு.

**கடகம்**
அன்றாட பணிகள் நன்றாக நடைபெற ஆண்டவனைப் பிரார்த்திப்பீர்கள், தொழில் ரீதியான பயணங்கள் இடம்பெறலாம், வெளியூர்த் தொடர்புகள் விரும்பும் விதத்தில் அமையும்.

**துலாம்**
ஆரோக்கியத்தில் தெளிவு பிறக்கும், விட்டுப்போன உறவுகள் மீண்டும் வந்து சேரலாம், விடாமுயற்சிக்கு வெற்றி கிடைக்கும், மகிழ்ச்சி தரும் பயணங்கள் இடம்பெறலாம்.

**மகரம்**
தொழில் நலன் கருதி எடுத்த முயற்சிகள் கைகூடும், உறவினர் பகைமாற எடுத்த முயற்சிகள் கைகூடும், கடன் பிரச்சினைகளை சாமர்த்தியமாகச் சமாளிப்பீர்கள்.

**ரிஷபம்**
வீட்டு உபயோகப் பொருட்களை வாங்கி மகிழும் வாய்ப்புண்டு, செய்தொழிலை விருத்தி செய்யும் எண்ணம் உருவாகும், பணப்புழக்கம் அதிகரிக்கும் வாய்ப்புண்டு.

**சிம்மம்**
குடும்பத் தேவைகளை நிறைவு செய்யும் எண்ணம் உருவாகும், உன்னதமான வாழ்வுக்கு அடித்தளம் அமைக்கும் நாள், தொலைபேசி வழியில் அனுகூலம் தரும் செய்திகள் வந்து சேரலாம்.

**விருச்சிகம்**
உடல் நலனில் கவனம் தேவை மனதில் இனம் புரியாத கவலைகள் தோன்றி மறையும் எடுத்த காரியங்களை நிறைவேற்ற அதிக பிரயாசை காட்ட வேண்டிய நாள்.

**கும்பம்**
பிரிந்தவர்கள் இணையும் வாய்ப்புண்டு, குடும்பத் தேவைகளை நிறைவு செய்யும் எண்ணம் உருவாகும், தொழில் நலன் கருதி அனுபவம் மிக்கவர்களின் ஆலோசனையைக் கேட்பீர்கள்.

**மிதுனம்**
எப்படி நடக்குமோ என நினைத்த காரியம் நல்ல விதமாக அமையும், வழிபாட்டால் மகத்துவம் காண வேண்டிய நாள், கௌரவமானவர்களின் சந்திப்புக்கள் இடம்பெறும்

**கன்னி**
வீட்டைச் சீரமைப்பதில் ஆர்வம் காட்டுவீர்கள், திறமைகள் வெளிப்படும் நாள், நிலையான வருமானத்திற்கு வழியமைத்துக் கொள்வீர்கள், மகிழ்ச்சி தரும் தகவல்கள் வந்து சேரலாம்.

**தனுசு**
குடும்பத்தினரிடையே மகிழ்ச்சி தரும் சம்பவங்கள் இடம்பெறலாம், சுபகாரியப் பேச்சுக்களில் முன்னேற்றம் காணும் நாள், நட்பு வட்டம் விரிவடையும் நாள்.

**மீனம்**
தொழில் வளர்ச்சி கருதி எடுத்த முயற்சிகள் கைகூடும், பேச்சில் கனிவு பிறக்கும், வாகன சுகமுண்டு, வளர்ச்சிப் பாதைக்கு வித்திட்டவர்களை சந்தித்து மகிழ்வீர்கள், பயணங்களால் பலனுண்டு.

வதந்தி பரவ திட்டமிட வேண்டிய அவசியம் இல்லை தானாக பரவி விடும்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கல்கியின் பாகம் - 4

# பொன்னியின் செல்வன்

காவியத் தொடர் 866





நேற்றிரவு எனக்கு அது நன்றாய்த் தெரிந்தது. ஐயா! என் இளைய சகோதரனைக் கடல் கொண்டு போய்விட வில்லை. பொன்னியின் செல்வனைச் சமுத்திரராஜன் காப்பாற்றிக் கரையில் சேர்த்தார். அவன் இப்போது நாகைப்பட்டினத்திலுள்ள புத்த விஹாரத்தில் இருக்கிறான். அவனைப் பார்ப்பதற்காகவே நான் நாகைப்பட்டினம் போயிருந்தேன். ஆனால் தங்களுக்கு இது எல்லாம் தெரியும் என்று எனக்கு ஒரு சந்தேகம் உண்டு.

தாங்கள் சந்தேகித்தது நியாயமே. ஆனால் தேவி, தெரிந்ததாக நான் காட்டிக் கொள்ளவில்லையே. வேறு யாருடைய காரியத்தில் தலையிட்டாலும் தங்களுடைய காரியத்தில் தலையிடுவதில்லை என்று வைத்துக் கொண்டிருக்கிறேன். என்னுடைய ஆட்களுக்கும் அவ்விதமே கட்டளை இட்டிருக்கிறேன். தாங்கள் செய்வது எதுவுமே உசிதமாகத்தான் இருக்கும் என்பது என் நம்பிக்கை. நானும் மலையமான் கொடும்பாளூர் வேளானும் அடிக்கடி பேசிக் கொண்டிருக்கிறோம், 'இளையபிராட்டி மட்டும் ஆண் பிள்ளையாய்ப் பிறந்திருந்தால், இந்த அகில உலகத்தையும் சோழர்களின் வெண்கொற்றக் குடையின் கீழ் கொண்டு வந்து தனியரசு செலுத்தி ஆண்டு வருவாள் என்று.

அந்த மாதிரி எண்ணம் எனக்கு இருந்தது உண்மை தான். நான் பெண்ணாகப் பிறந்திருந்த போதிலும் என் சகோதரர்கள் மூலமாக அந்த மனோரதம் நிறைவேறும் என்ற ஆசையுடன் இருந்தேன். அந்த ஆசையை இப்போது விட்டுவிட்டேன். ஐயா! இராஜ்ய விஜயங்களில் பெண்கள் தலையிடவே கூடாது என்று முடிவு செய்து விட்டேன்! பாருங்கள், என் சகோதரனை நாகைப்பட்டினம் சூடாமணி விஹாரத்தில் இருக்கும்படி செய்தேன் அதன் விபரீதப் பலனைப் பாருங்கள்!

"ஒன்றும் நேர்ந்து விடவில்லையே, தாயே! பொன்னியின் செல்வனை நடுக்கடலில் காப்பாற்றிய சமுத்திரராஜன், இப்போது கரையில் பத்திரமாயிருக்கும் போது தீங்கு விளைவித்து விடுவானா?"

"ஐயா! தாங்கள் உடனே என் தந்தையிடம் வந்து இவ்வாறு தைரியம் சொல்லுங்கள்."

"ஆகா! சக்கரவர்த்திக்குத் தெரியுமா, என்ன? இளவரசர் சூடாமணி விஹாரத்தில் இருக்கும் செய்தி?"

"நேற்று இரவுதான் சொன்னேன் சொல்லும்படியாக நேர்ந்துவிட்டது."

"ஆகா! இன்னும் கொஞ்சநாள் சொல்லாமலிருந்திருந்தால் நன்றாயிருந்திருக்கும். தாங்கள் செய்திருந்தது மிக நல்ல ஏற்பாடு என்று நினைத்தேன்! தேவி! சோழ நாடு முழுவதும் ஒரே கொந்தளிப்பாகயிருக்கிறது. நேற்று அடித்த புயல் காரணமாக வெளியில் ஏற்பட்ட கொந்தளிப்பு சில நாளாகவே சோழ நாட்டு மக்களின் உள்ளத்தில் பொங்கிக் கொண்டிருக்கிறது. மதுராந்தகர் மீதும் பழுவேட்டரையர்கள் மீதும் ஜனங்கள் ஒரே கோபமாகயிருக்கிறார்கள். இளவரசரைச் சிறைப்படுத்திக் கொண்டு வரக் கப்பல்கள் அனுப்பப்பட்டதையும் அறிந்திருக்கிறார்கள். இளவரசரைப் பழுவேட்டரையர்கள் தான் கடலில் மூழ்கடித்து விட்டதாகப் பலர் நம்புகிறார்கள்.

(தொடரும்...)



# சிறுவர் அரங்கம்

## பூக்களுக்கும் போட்டி உண்டு



(நேற்றைய தொடர்ச்சி)

அடுத்த நாள் வந்த கூட்டம் செவ்வந்தி மலர்கள் அழகு என்று சொல்லி சென்றது.

அடுத்த நாள் வந்த கூட்டம் குளத்தில் உள்ள தாமரை மலர்கள் தான் அழகு என்று சொல்லிவிட்டு சென்றது. இப்படி தினம் ஒரு கூட்டம் வந்து ஒவ்வொரு மலர்களை அழகு என்று சொல்லிவிட்டு சென்றது. இதனால் அங்குள்ள மலர்களுக்குள் ஒரு போட்டியே வந்து விட்டது.

அங்குள்ள மலர் செடிகளை தினமும் பராமரித்து வருபவன் பெயர் முருகன். அவன் தினமும் ஒவ்வொரு செடிகளாய் கவனித்து அதற்கு மண் அணைத்து தண்ணீர் விட்டு பராமரித்து வந்தான். அவன் நாள்தோறும் இந்த மலர்களுடனே இருப்பதால் அதோடு பேச முடியாதே [illegible] அதனுடைய தோற்றத்தை வைத்து அந்த செடி எப்படி உள்ளது என்று கண்டு பிடித்து விடுவான். அப்படி இந்த ஒரு வாரமாய் பார்க்கும்பொழுது ஏதோ ஒரு மலர் செடி மட்டும் செழுசெழுவெனவும், மற்ற மலர் செடிகள் வாடிப் போயும் இருப்பதாக அவன் மனதுக்கு தென்பட்டது.காரணம் புரியாமல் விழித்தான்.

ஒரு நாள் அந்த ஒரு மலர் செடிகளின் வேர்களுக்கு மண் அணைத்து தண்ணீர் விட்டு கொண்டிருக்கும்போது ஒரு கூட்டம் அந்த மலர் செடி கள் அருகே வந்து இரசித்து கொண்டிருந்தன. பின் அவைகள் போகும் போது சூரியகாந்தி மலர்கள் தான் [illegible] அழகு என்று சொல்லி சென்றன.அது இவன் காதிலும் விழுந்தது. அவன் மண் அணைத்துக்கொண்டிருந்த அந்த மலர் செடி சட்டென வாடுவதை கவனித்தான். உட்கார்ந்திருந்தவன் எழுந்து மற்ற மலர் செடிகளை பார்க்க அவைகளும் வாடி இருப்பது போல் அவனுக்கு பட்டது. சூரிய காந்தி செடி மட்டும் கொஞ் சம் பிரகாசமாய் இருப்பதாகபட்டது. அவனுக்கு இலேசாக உண்மைகள் தெரிய ஆரம்பித்தன.

மறு நாள் ஒரு கூட்டம் மலர் செடிகள் இருக் கும் இடத்துக்கு வந்து இரசித்து பார்த்தது. அவகளுக்கு மிகவும் பிடித்து விட்டது. இங்குள்ள எல்லா மலர்களும் எவ்வளவு அழகாக இருக்கின்றன. அதை விட அந்த மலர்களை தாங்கி நிற்கும் செடிகளும் எவ்வளவு கம்பீரமாய் நிற்கிறது. இவ்வளவு பெரிய செடிகளை தாங்கி நிற்கும் இந்த வேர்கள் கூட எவ்வளவு உறுதியாய் இருக்க வேண்டும். என்று பேசிக்கொண்டு சென்றனர். இதை கேட்ட மலர்களுக்கு அப் பொழுது தான் உரைத்தது. நம்மை மட்டுமே அழகு என்று நினைத்துக் கொண்டிருந்தோம் நம்மை தாங்கிக் கொண்டிருக்கும் தண்டு. இலை, வேர் இவைகள் கூட அழகுதான். இவைகள் இல்லாவிட்டால் நாம் இல்லை என்று உணர்ந்து கொண்டது.

இப்படி தினமும் பூங்காவை பார்க்க வந்த கூட்டம் எல்லா பூக்களும் செடி களும் அழகு என்று சொல்லி செல்வதால் எல்லா மலர் செடிகளும் செழிப்பாக இருந்தன. இதற்கு காரணம் முருகன் தான். அவன் மலர் செடிகளை பார்க்க வருபவர்களிடம் முன்னரே நீங்கள் தயவு செய்து எல்லா மலர்களையும் பாராட்டி செல்லுங்கள் என்று கேட்டுக் கொள்வான். இதனால் மலர்கள் கொஞ்சம் கொஞ்சமாக போட்டி பொறாமைகளை மறந்தன. (முற்றும்.)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆக்கப்பூர்வமான, எண்ணங்களை உற்பத்தி செய்யும் பொழுது வாழ்க்கையின் ஓட்டம் எளிதாக இருக்கும். – யாரோ

வலம்புரி
TP: 021 222 3378
website : www.valampurii.lk

## மக்களின் மன உணர்வை புரிந்து கொள்ளாத போது....

ஒரு திரைப்படத்தின் வெற்றி என்பது இரசிகர்களின் மன உணர்வைப் புரிந்து கொள்வதில் தங்கியுள்ளது.

ஆம், இரசிகர்களின் மனவேகம் எப்படியாக உள்ளதென்பதைப் படத் தயாரிப்பாளர்கள் – இயக்குநர்கள் புரிந்து கொள்ள வேண்டும்.

அந்தப் புரிதலுக்கு ஏற்ப, திரைப்படத்தின் நகர்வு இருக்கும் போதுதான் அந்தப் படம் வெற்றி அடைகிறது.

ஆம், இது திரைப்படத்தில் மட்டுமல்ல. பாடங்களைப் போதிக்கின்ற ஆசிரியர்கள் முதல் அரசியல்வாதிகள், ஆன்மீகவாதிகள் வரை மக்களின் மனநிலையைப் புரிந்து கொண்டு செயற்படும்போதுதான் அவர்களால் மக்களின் மனங்களை வெல்ல முடிகிறது.

ஆம், இலங்கையில் ஊழல் ஆட்சியாளர்களுக்கு எதிராக நடந்த அரகலப் போராட்டம் உலக மக்களுக்கு ஒரு பாடத்தைப் புகட்டியது.

அதாவது ஆட்சியாளர்கள் நேர்மையற்றவர்களாக – ஊழல்வாதிகளாக – மக்களின் உயிர்களுக்குப் பாதுகாப்பு வழங்காதவர்களாக இருப்பார்களாயின், அவர்களை ஆட்சியில் இருந்து ஓட ஓடத் துரத்த வேண்டும் என்பதே அந்தப் பாடமாகும்.

உண்மை. இலங்கையில் ராஜபக்ஷ தரப்புக்கு எதிராக மக்கள் கொண்ட பேரெழுச்சி அவர்களை ஓட ஓடத் துரத்தியது.

அதன் விளைவாக ஊழலை ஒழிக்க வேண்டும் என்ற நோக்கத்தைக் கொண்ட ஓர் அரசாங்கம் நாட்டில் அமையப் பெற்றது.

இந்த அடிப்படையிலேயே வங்களாதேசில் அரசாங்கத்துக்கு எதிராக மக்கள் பேரெழுச்சி கொண்டனர்.

அந்தப் பேரெழுச்சி வங்கதேசத்து ஆட்சியை நிர்மூலமாக்கியது.

இதுபோல தற்போது நேபாளத்தில் ஆட்சியாளர்களுக்கு எதிராக மக்கள் நடத்திய போராட்டம் அந்நாட்டுப் பிரதமரை, அமைச்சர்களைத் தலைதெறிக்க ஓட வைத்துள்ளது.

அவர்களின் இல் இடங்கள் மற்றும் பாராளுமன்றம், கட்சி அலுவலகங்கள் தீக்கிரையாக்கப்பட்டுள்ளன.

அந்த நாட்டின் நிதியமைச்சரை பொதுமக்கள் தாக்குகின்ற காணொளி வெளிவந்து பெரும் அதிர்ச்சியை ஏற்படுத்தியுள்ளது.

ஆக, இலங்கையில் நடந்த அரகலப் போராட்டம் இப்போது வங்களாதேஷ், நேபாளம் எனப் பற்றி பரவியதைக் காண முடிகிறது.

ஆக இங்கு நாம் சுஹக் சுவுயது, தகவல் தொழில்நுட்பம் காரணமாக உலகம் சுருங்கி விட்டது. மக்களின் தொடர்பாடல்களும் கருத்துப் பரிமாற்றங்களும் விரைவுபடுத்தப்பட்டுள்ளன.

இதனால் உடனடித் தீர்மானங்களை மக்கள் கூட்டாக எடுக்க முடிகிறது.

எனவே அரசியல்வாதிகள் மிகவும் நேர்மையாக நடந்து கொள்ள வேண்டும்.

இல்லையேல் எங்கு, எப்போது மக்கள் புரட்சி வெடிக்கும் என்பதைத் தப்பியோடும்போதுதான் அவர்களால் அறிந்து கொள்ள முடியும்.

## மான் இறைச்சியுடன் சந்தேக நபரொருவர் கைது

முல்லைத்தீவு புதுக்குடியிருப்பு பொலிஸ் பிரிவிற்குட்பட்ட கைவேலிப் பகுதியில் நபர் ஒருவர் மான் இறைச்சியுடன் நேற்றுக் கைது செய்யப்பட்டுள்ளார்.

முல்லைத்தீவு மாவட்ட புலனாய்வுப் பிரிவினருக்குக் கிடைத்த இரகசியத் தகவலின் அடிப்படையில் கைவேலிப் பகுதியில் நடத்தப்பட்ட விசேட சோதனை நடவடிக்கையில் 3 கிலோகிராம் மான் இறைச்சி உடமையில் வைத்திருந்த குற்றச்சாட்டில் கைவேலிப்பகுதியினைச் சேர்ந்த 40 வயதுடைய நபரே இவ்வாறு கைது செய்யப்பட்டுள்ளார்.

கைது செய்யப்பட்ட நபர் விசாரணைகளின் பின்னர் இன்று முல்லைத்தீவு நீதிமன்றத்தில் முற்படுத்தப்பட வுள்ளதாக புதுக்குடியிருப்புப் பொலிஸார் தெரிவித்துள்ளனர். (ம-7,299)

## புதிய அரசியல் முயற்சியில் மகிந்த தரப்பு ஆர்வம்

(கொழும்பு)

மகிந்தவின் காற்றில் நாமலின் வாசம் என்ற தலைப்பில் ஒரு புதிய அரசியல் முயற்சி விரைவில் ஆரம்பிக்கப்பட வுள்ளதாக ஸ்ரீ லங்கா பொதுஜன பெரமுனவின் வட்டாரங்கள் தெரிவிக்கின்றன.

இது குறித்து கருத்து வெளியிட்டுள்ள பெரமுனவின் மூத்த செய்தித் தொடர்பாளர் கொழும்பிலுள்ள உத்தியோகபூர்வ இல்லத்திலிருந்து வெளியேறிய பிறகு, முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ கட்சி ஆதரவாளர்களுடனான சந்திப்புகளை மீண்டும் தொடங்கியுள்ளார்.

முன்னாள் ஜனாதிபதி பதவியை இழந்த பிறகு "Mahinda Sulanga" இயக்கம் தொடங்கப்பட்டது போலவே, குறித்த புதிய அரசியல் முயற்சியும் விரைவில் அறிமுகப்படுத்தப்படும் என்றார். (ம-7)

## மகளுக்குத் தனது கரங்களால் உணவூட்டிய ஆனந்தசுதாகரன்

### பலர் மனதையும் நெகிழ வைத்த சம்பவம்

(போகம்பறை)

அரசியல் கைதிகளுக்கும் அவர்களது உறவினர்களுக்குமான சந்திப்பொன்று போகம்பறைச் சிறைச்சாலையில் இடம்பெற்றுள்ளது. இந்தச் சந்திப்பின்போது அரசியல் கைதியான ஆனந்தசுதாகரன் தனது மகளுக்கு தனது கரங்களால் உணவூட்டிய சம்பவம் பலர் மனதினையும் நெகிழ வைத்துள்ளது.

குறித்த சந்திப்புத் தொடர்பில் கருத்து வெளியிட்ட குரலற்றவர்கள் அமைப்பின் செயற்பாட்டாளர் கோமகன்,

அரசியல் கைதிகளைச் சந்தித்துவிட்டு கனத்த இதயத்துடனும் கண்களில் கண்ணீருடனும் அரசியல் கைதிகளின் உறவுகளும் நாங்களும் வெளியே வந்தோம்.

குறுகிய நேரத்தில் நடந்த இந்தச் சந்திப்பின் போது தனது மகளுக்கு ஆனந்தசுதாகரன் உணவூட்டிய நெகிழ்ச்சிச் சம்பவம் மனதை ரணமாக்கியது.

இந்தச் சந்தர்ப்பமானது நிரந்தரமாக இந்தப் பிள்ளைகளுக்குக் கிடைக்க வேண்டுமென ஜனாதிபதியைக் கேட்டுக் கொள்கின்றோம்.

தேசிய கைதிகள் தினத்தை முன்னிட்டு கைதிகள் பொதுமன்னிப்பின் கீழ் விடுதலை செய்யப்படுவது வழமை. ஆனால் இந்த ஆண்டு கைதிகள் விடுதலை செய்யப்படவில்லை.

தமது விடுதலை இடம் பெறும் எனக் கைதிகள் நம்பிக்கையுடன் காத்திருக்கின்றனர். மீதமாக உள்ள பத்து அரசியல் கைதிகளும் நல்லிணக்கத்தின் அடிப்படையில் விடுதலை செய்யப்பட வேண்டும் என வினயமாக ஜனாதிபதியைக் கேட்டுக் கொள்கின்றோம் என்றார். (ம-7,104)

## மோ.சைக்கிள் - கார் விபத்து யுவதியொருவர் உயிரிழப்பு

### கார்ச் சாரதி தப்பியோட்டம்

(பொத்துவில்)

அக்கரைப்பற்று - பொத்துவில் தம்பிலுவில் வீதியில் இடம்பெற்ற வாகனவிபத்தில் யுவதியொருவர் உயிரிழந்துள்ளார்.

சம்பவம் தொடர்பில் தெரியவருவதாவது,

பொத்துவில் திசை நோக்கிப் பயணித்த கார் ஒன்று எதிர்த்திசையில் வந்த மோட்டார் சைக்கிளுடன் மோதியதில் குறித்த விபத்து சம்பவித்துள்ளது.

விபத்தை அடுத்து சாரதி காரை நிறுத்தாமல் ஓட்டிச் சென்று திருக்கோவில் - தம்பிலுவில் பகுதியில் காரை கைவிட்டு தப்பிச் சென்றுள்ளார்.

விபத்தில் மோட்டார் சைக்கிள் செலுத்துநர் மற்றும் பின்னால் அமர்ந்து சென்ற யுவதியும் பலத்த காயங்களுடன் திருக்கோவில் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்ட நிலையில் யுவதி சிகிச்சை பலனின்றி உயிரிழந்துள்ளார்.

இவ்வாறு உயிரிழந்தவர் தம்பிலுவில் பகுதியைச் சேர்ந்த சுந்தரலிங்கம் அர்ச்சனா (வயது-24) என அடையாளம்காணப்பட்டுள்ளது.

சம்பவம் தொடர்பிலான விசாரணைகளை ஆரம்பித்துள்ள திருக்கோவில் பொலிஸார் தப்பியோடிய காரின் சாரதியைக் கைது செய்வதற்கான விசாரணைகளை முடுக்கிவிட்டுள்ளனர். (ம-7)

## இளம் குடும்பப் பெண் மரணம் சந்தேகத்தில் கணவன் கைது

### உண்மையைப் போட்டுடைத்த ரிப்போட்

(தம்புள்ள)

தம்புள்ள பகுதியைச் சேர்ந்த கலேவெல வலயக்கல்வி அலுவலகத்தில் பணியாற்றும் தம்புள்ளயைச் சேர்ந்த இளம் குடும்பப்பெண்ணொருவர் சந்தேகத்துக்கு இடமான முறையில் உயிரிழந்த நிலையில் அவரது மரணம் இயற்கையாக இடம்பெற்றதல்ல எனப் பிரேதப் பரிசோதனை அறிக்கையில் உறுதிப்படுத்தப்பட்டுள்ளது.

இந்நிலையில் மரணம் தொடர்பில் தவறான சாட்சியமளித்த இறந்த பெண்ணின் கணவர் சந்தேகத்தின் பேரில் கைது செய்யப்பட்டுள்ளார்.

சம்பவம் தொடர்பில் மேலும் தெரியவருவதாவது,


கடந்த 13ஆம் திகதி தம்புள்ள, தித்தவெல்கொல்ல பகுதியிலுள்ள ஒரு வீட்டின் அறையில் ஒரு பெண் தூக்கத்தில் இறந்துவிட்டதாகப் பொலிஸாருக்குத் தகவல் கிடைத்த நிலையில் அங்கு சென்ற பொலிஸார் குறித்த பெண்ணின் சடலத்தை மீட்டிருந்தனர்.

இதன்போது குறித்த பெண்ணின் கணவன் தனது மனைவி தேர்வுக்காகப் படித்துவிட்டு மாலை 4.00 மணியளவில் படுக்கைக்குச் சென்றதாகவும் இரவு 9.00 மணியளவில் அவரை எழுப்புமாறு தெரிவிக்கப்பட்டதாகவும் அதன்படி, இரவில் தனது மனைவியை எழுப்பச் சென்றதாகவும் ஆனால் அவர் எழுந்திருக்காததால், அவருக்கு உடல்நிலை சரியில்லை என்று நினைத்து 1990 அம்புலன்ஸ் சேவையை அழைத்ததாகவும் அதன் பின்னரே அவர் உயிரிழந்த விடயம் தெரியவந்ததாகவும் பொலிஸாரிடம் வாக்குமூலம் அளித்திருந்தார்.

எனினும் பெண்ணின் மரணத்தில் சந்தேகம் நிலவிய நிலையில் பிரேதப்பரிசோதனை அறிக்கையும் அதனை உறுதி செய்துள்ளது.

அவ் அறிக்கைக்கும் கணவனின் வாக்குமூலத்திற்கும் இடையே முரண்பாடு காணப்படும் நிலையில் அவர் கைது செய்யப்பட்டுள்ளார். (ம-7)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# இலங்கை நாணயத்தின் வரலாறும் அரசியலும் ஆங்கிலேயர் ஆட்சிக்காலத்தில் நாட்டின் வளர்ச்சி

## பகுதி VI

01

கலாநிதி க. தவலிங்கம்
ஓய்வுநிலை நில அளவையாளர் நாயகம். தவிசாளர் - எல்லை நிர்ணய ஆணைக்குழு.

பெருந்தோட்டப் பயிர்ச் செய்கையின் அடிச்சுவட்டில் தோன்றிய முதலாளித்துவ முறைதான், இலங்கையில் ஒரு புதிய பொருளாதார யுகத்தைத் தோற்றுவித்தது எனத் திட்டவட்டமாகக் கூறலாம். அந்நிய நாட்டவர்கள், உற்பத்தியின் மூலங்களான நிலம், முதலீடு, தொழிலாளர்கள் என்னும் முத்துறைகளின் மேலும் ஆதிக்கம் செலுத்தத் தொடங்கியதன் பயனாகவே, புதுப் பொருளாதார முறை முளைகொண்டு இலங்கை வளர்ச்சியடையத் தொடங்கியது.

இவ்விதமாகத் தோன்றிய சக்திவாய்ந்த இப் பெருந்தோட்ட முறை, நாட்டு மக்களின் தொழில் முறைகளை மாற்றியமைத்ததுமன்றி சில ஆண்டுகளுக்குள் அரசாங்க வருவாயின் மூன்றிலொரு பகுதியையும் அளிக்கலாயிற்று.

### இலங்கையில் முதலாளித்துவ முறையின் தோற்றம் பற்றி.....

இலங்கையில் கோப்பிக் காலத்துடன் ஆரம்பித்த இம் முதலாளித்துவ முறையானது, அவ்விளைபொருளின் அழிவுடன் மறைந்துவிடவில்லை. கோப்பிச் செய்கையின் பயனாக எழுந்த பொருளாதார அமைப்பு, தேயிலைக் காலத்துடன் தொடர்ந்து நீடித்ததுமன்றி, புதிய வளர்ச்சியையும் பெற்றுத் திகழ்ந்தது.

19 ஆம் நூற்றாண்டு முழுவதிலும் தோட்ட முதலாளிகளின் பிரச்சினைகளே நாட்டுப் பிரச்சினைகளாகக் கருதப்பட்டன. அவற்றைத் தீர்க்க எடுக்கப்பட்ட முயற்சிகளின் பேறாகப் பழையன கழிந்து, புதியன வெகு வேகத்துடன் புகுந்தன.

தெருக்கள், புகையிரதவீதிகள், வர்த்தக விவசாயம், வளர்ந்துவரும் பணப் பொருளாதாரம், புது வகுப்புக்கள், சுதந்திர இயக்கம், மாறிவரும் சமூக, பொருளாதாரக் கோட்பாடுகள் எனும் நவீன இயக்கங்களைக் கொண்டு திகழ்ந்த 1900 ஆம் ஆண்டு இலங்கையானது, 1830 ஆம் ஆண்டு, எத்துணை அள விற்கு ஆயிரம் ஆண்டு கட்கு முன்னிருந்த நிலையிலின்று வேறுபட்டதோ, அத் துணை அளவிற்கு வேறுபட்டுக் காணப்பட்டது.

முதலாளித்துவ முறையின் வருகையுடன் இயங்க ஆரம்பித்த சக்திகள், எழுபது ஆண்டுகளுக்கு மாத்திரமே தொழிற்பட்ட போதிலும், அவை அக் குறுகிய காலத்தினுள் பொருளாதார முன்னேற்றத்திற்கு விலங்கிட்ட தடைகள் யாவற்றையும், தகர்த்தெறிந்து விட்டன.

இம் மாற்றங்கள் அதி முக்கியத்துவம் வாய்ந்தவை. ஏனெனில் அவை பழைய பொருளாதார வாழ்க்கை முறைகளைத் தகர்த்து எறிந்ததுமன்றி, நவீன தற்கால வாழ்க்கை முறைகளையும் உண்டு பண்ணின. சுருங்கக் கூறின், இலங்கையின் பொருளாதாரம், மானிய முறை அடிப்படையினின்று, பண முறையை அடிப்படையாகக் கொண்ட முதலாளித்துவ முறையாக நிலைமாறியது. இம் மாற்றத்தினால் விளைந்த பயன்கள், இங்கிலாந்தில் கைத் தொழிற் புரட்சியினல் ஏற்பட்ட பயன்களுக்கு நிகரானவை எனக் கூறின் மிகையாகாது.

### இலங்கையின் ஏற்றுமதிப் பொருளாதாரம்

தோட்டப் பகுதியில் ஏற்பட்ட இவ்வளர்ச்சி, இலங்கையின் பொருளாதார அமைப்பை அடியோடு மாற்றியமைத்தது. உணவுப் பொருள்களை உற்பத்தி செய்யும் விவசாயத்தையே தொழிலாகக் கொண்டிருந்த நாடு, பணப் பயிர்களை விளைவிக்கும் நாடாக உருமாறியது. இலங்கையின் பொருளாதாரம், ஏற்றுமதிப் பொருளாதாரமாக மாறி, நாட்டு வருமானத்தின் பெரும் பகுதி, விளைபொருள்களைப் பிறநாடுகளுக்கு ஏற்றுமதி செய்வதன் மூலம் பெறும் நிலை எழுந்தது. உலகச் சந்தையில் விளைபொருள்களின் விலைகளில் ஏற்படும் ஏற்றத்தாழ்வுகளினால் நாட்டின் பொருளாதாரம் பாதிக்கப்படலாயிற்று. தோட்டப் பயிர்ச்செய்கையில் ஏற்படும் வளர்ச்சி, தேய்வு என்பன, இந் நாட்டு மக்களை நேரடியாகப் பாதிக்கலாயின.

1860 ஐ அடுத்த ஆண்டுகளில் ஏற்றுமதிப் பொருட்களில் கோப்பி 60 விகிதமாக இருந்தது. முதலாம் உலகப்போரின் முடிவில் தேயிலை, இறப்பர், தெங்குப் பொருட்கள் என்பன இலங்கையின் ஏற்றுமதியில் 90 விகிதமாக அமைந்தன என்பது குறிப்பிடத்தக்கது.

### இலங்கையின் கிராமிய விவசாயப் பொருளாதாரம்

மலைநாட்டில் விருத்தியடைந்த இப்பெருந் தோட்டப் பயிர்ச் செய்கை, இலங்கையின் மற்றைய பகுதிகளில் விவசாயக் குடியானவர்களின் பொருளாதார நிலைகளில் அடிப்படையான மாற்றங்களை ஏற்படுத்தவில்லை என்பது நோக்கற்பாலது.

புதுப் பொருளா தார முறை, குடியானவர்களின் மானிய முறைச் சமூக, பொருளாதார அமைப்புகளைப் பாதித்த பொழுதிலும், அம்முறையினை முற்றாக அழித்து விடமுடியவில்லை. இதனால் இலங்கையின் பொருளாதாரம் இரு வகைப்பட்டதாக அமைந்தது. ஒருபுறம் தோட்டங்களையும், வர்த்தகத்தையும் அடிப்படையாகக் கொண்ட முதலாளித்துவ முறையும், மறுபுறம் விவசாயத்தை மாத்திரமே அடிப்படையாகக் கொண்ட பாமர மக்களின் கிராமப்புற முறையும் அக்கம் பக்கமாக இடம் பெறலாயின.

### இலங்கையில் நில உரிமை மற்றும் நிலப் பயன்பாட்டில் ஏற்பட்ட மாற்றம்

சிங்கள அரசர்கள் காலத்தில் அரசனுக்குச் சொந்தமாக விருந்த கபாடகம் நிலங்களும், கிராமங்களின் பொது நிலங்களும் 1835 தொடக்கம் 1847 வரை கோப்பியின் வளர்ச்சியினால் தோட்டத் துரைமாரின் தனி உடமைகளாயின.

கண்டிப் பிரதேசங்களில், நிலவுரிமைகளில் பெரும் மாற்றம் ஏற்பட்டது. நெல் விளைவிக்கப்பட்ட காணிகள் தப்பின. ஆனால் உப உணவுப் பொருள்களை உற்பத்தி செய்யும் உரிமைகளும், பொது நிலங்களில் மந்தை மேய்க்கும் உரிமைகளும் பறிபோயின. குடியானவர்களுக்குப் பயனுடைய இந் நிலங்களைத் தோட்டத் துரைமார் அபகரித்தனர்.

1852 தொடக்கம் கோப்பி விலைகள் கிரமமாக உயர்ந்து, ஆண்டுதோறும் கோப்பியிலிருந்து பெறப்பட்ட ஆதாயம் அதிகரித்து வந்தது. பயிரிடப்பட்ட நிலங்கள் அதிகரித்தன.

வர்த்தகம் பெருகியது. அதிகரித்த வருமானம், மீண்டும் தோட்டங்களில் முதலீடு செய்யப்பட்டது. இக்காலத்தில் பழைய தோட்டங்கள் விஸ்தரிக்கப்பட்டன, புதுத் தோட்டங்கள் திறக்கப்பட்டன. கோப்பி பயிரிடப்பட்ட நிலம், நான்கு ஆண்டுகளில் இருமடங்காகப் பெருகியது. நுவரெலியாவில் 1874 இல் 84,000 ஏக்கர் நிலத்தில் கோப்பி பயிரிடப்பட்டது.

நில அளவையாளர்களால் காணிகள் அளந்து, எல்லைகளிடப்பட்டவுடன் அவை விற்பனையாயின. ஆண்டுதோறும் விசாலமான நிலங்கள், அதிகரித்த விலைகளுக்கு விற்பனை செய்யப்பட்டன. இருபது ஆண்டுகளுக்கு முன் ஏக்கர் இரண்டு பவுணுக்கு விலைப்பட்ட காணிகளை இப்போது 15, 20, 25 பவுண் வீதம் வாங்கத், தோட்டத் துரைமார் போட்டியிட்டனர்.

கட்டுப்பாடின்றிக் காடுகள் அழிக்கப்பட்டுத் தோட்டங்கள் திறக்கப்பட்டதனால் மழைவீழ்ச்சி குறையலாம் என்றும், மண்ணரிப்பினால் கெடுதிகள் விளையுமென்றும், தாவர ஆராய்ச்சி நிலையம் அரசாங்கத்திற்கு ஓர் அபாய அறிவிப்பை 1870 இல் விடுத்தது.

இதன் பயனாக 1874 இல் ஆள்பதி கிறகரி, வனபரிபாலனச் சட்டத்தை இயற்றிப் புதுத்தோட்டங்கள் திறக்கப்படுவதை அரசாங்கக் கட்டுப்பாட்டின் கீழ்க்கொண்டு வந்தார்.

1880 இற்குப் பின் தேயிலைத் தோட்டங்கள் உயர் மலைப்பிரதேசங்களை நாடிச் செல்லவே, கோப்பிப் பிரதேசத்துக்காக அமைக்கப்பட்ட இச் சட்டம் வலியிழந்து போயிற்று.

(தொடரும்...)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## கௌசல்யா...

நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பின்போதே தேர்தல்கள் ஆணையாளர் நாயகம் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

இராமநாதன் அர்ச்சுனா போட்டியிட்டு வெற்றிபெற்ற சுயேட்சைக் குழுவில் இரண்டாம் இடத்தினைச் சட்டத்தரணி கௌசல்யா பெற்றிருந்தமை குறிப்பிடத்தக்கது. (ம-7,33)

## நீதிமன்றத்...

உத்தியோகபூர்வமாக அறிவிக்கப்பட்டால் நீதிமன்றத் தீர்ப்பின் பிரகாரம் தேர்தல்கள் ஆணைக்குழு நடவடிக்கை எடுக்கும் எனத் தேர்தல்கள் ஆணையாளர் நாயகம் சமன் ஸ்ரீரத்நாயக்க தெரிவித்தார்.

யாழ்ப்பாணத்தில் நேற்று நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பின்போதே தேர்தல்கள் ஆணையாளர் நாயகம் இவ்வாறு தெரிவித்தார். (ம-7,33,104)

## 4 மணி...

துறையின் துணைக் கட்டுப்பாட்டாளரும் ஊடகப் பேச்சாளருமான மகேஷ் கருணாதாச தெரிவித்தார். ஊடகங்களுக்கு நேற்று கருத்துத் தெரிவிக்கும் போதே மேற்கண்டவாறு தெரிவித்தார். அவர் தொடர்ந்து தெரிவிக்கையில்,

கடவுச்சீட்டு ஒரு நாள் சேவையின் கீழ் ஒரு நாளைக்கு 1500 முதல் 2000 வரை கடவுச்சீட்டுகளும் வழக்கமான சேவையின் கீழ் சுமார் 1000 கடவுச்சீட்டுக்களும் வழங்கப்படும்.

கடவுச்சீட்டுப் பெற ஒரு நாள் சேவைக்கு 20 ஆயிரம் ரூபாவும் வழக்கமான சேவைக்கு 10 ஆயிரம் ரூபாவும் அறவிடப்படுகிறது.

கடவுச்சீட்டிற்கு விண்ணப்பிக்கும் போது தேசிய அடையாள அட்டையில் ஏதேனும் தெளிவின்மை இருந்தால் காலதாமதங்கள் ஏற்படக்கூடும்.

எனவே கடவுச்சீட்டிற்கு விண்ணப்பிக்கும்போது மக்கள் தங்கள் தேசிய அடையாள அட்டை மற்றும் பிறப்புச் சான்றிதழில் கவனம் செலுத்தி, அவை தெளிவாக இருப்பதை உறுதி செய்ய வேண்டும் என்றார். (ம-7)

## கடந்த...

பட்டுள்ளன.

உரிய காலப்பகுதிக்குள் அப்பணிகளை நிறைவுசெய்யத் தவறியதால் சுமார் 29 பில்லியன் ரூபாய் பணத்தை மேலதிகமாக செலவிட வேண்டிய நிலை உருவாகியுள்ளதாக சுகாதார மற்றும் வெகுசன ஊடக அமைச்சர் நளிந்த ஜயதிஸ்ஸ தெரிவித்தார்.

களுத்துறையில் நேற்று இடம்பெற்ற நிகழ்வு ஒன்றிலேயே இதனைத் தெரிவித்தார். (ம-7)

## யாழில்...

பொலிஸ் நிலையப் போதைத் தடுப்புப் பிரிவினரால் இந்தக் கைது நடவடிக்கை முன்னெடுக்கப்பட்டது.(ம-7,104)

## கொழும்பில்...

தாக்கல் செய்த மேல்முறையீட்டு மனுவை விசாரிக்க உயர் நீதிமன்றம் நேற்று அனுமதி அளித்தது.

உண்மைகளை நீண்ட நேரம் பரிசீலித்த பிறகு, மேல்முறையீட்டு மனுவை விசாரிக்க உயர் நீதிமன்றம் அனுமதி அளித்தது. பின்னர் இந்த மேல்முறையீட்டு மனுவை ஜனவரி (30) அன்று விசாரிப்பதற்கான திகதியை நிர்ணயித்தது.

2008-2009ஆம் ஆண்டுகளில் கொழும்பு மற்றும் அதனை அண்டிய பகுதிகளில் 5 மாணவர்கள் உள்ளிட்ட 11 பேரை வெள்ளை வானில் கடத்திச் சென்று கப்பம் பெற்றுக் கொண்டு காணாமல் ஆக்கிய சம்பவம் தொடர்பில் வசந்த கரன்னாகொட மற்றும் 13 பேருக்கு எதிராக முன்னாள் சட்டமா அதிபர் குற்றப்பத்திரிகை தாக்கல் செய்திருந்தார்.

இந்த நிலையில் 11 இளைஞர்கள் கடத்தல் வழக்கில் முன்னாள் கடற்படைத் தளபதி வசந்த கரன்னகொடவுக்கு எதிரான குற்றச்சாட்டுகளை தொடர்ந்தும் முன்னெடுக்கப்போவதில்லை என சட்டமா அதிபர் கடந்த 13.10.2021 அன்று மேன்முறையீட்டு நீதிமன்றுக்கு அறிவித்திருந்தமை குறிப்பிடத்தக்கது. (ம-7)

## தியாக தீபம்...

ரான் பின் வீதியில் அமைந்துள்ள திலீபன் நினைவிடத்தில் நினைவேந்தல் இடம்பெற்றது.

இதன்போது பொதுச் சுடர் ஏற்றி மலர்மாலை அணிவிக்கப்பட்டு மலரஞ்சலி செலுத்தப்பட்டது. இவ் நினைவேந்தல் நிகழ்வில் முன்னாள் போராளிகள், அரசியல் கட்சிகளின் உறுப்பினர்கள், பொதுமக்கள் எனப் பலரும் கலந்து கொண்டு மலரஞ்சலி செலுத்தினர்.

தமிழீழ விடுதலைப் புலிகள் அமைப்பின் அரசியல்துறைப் பொறுப்பாளரான திலீபன் இந்திய அமைதிப் படையிடம் ஐந்து அம்சக் கோரிக்கைகளை 1987 செப்ரெம்பர் 15ஆம் திகதி முன்வைத்து உணவையும் நீரையும் தவிர்த்து போராட்டத்தை முன்னெடுத்தார்.

அவரின் கோரிக்கைகள் எதுவும் நிறைவேற்றப்படாத நிலையில் 1987 செப்ரெம்பர் 26 ஆம் திகதி முற்பகல் 10.48 மணிக்கு உயிர்நீத்தார் என்பது குறிப்பிடத்தக்கது. (ம-7,33,104)

## வட...

வடக்கு, கிழக்கு மாகாண அபிவிருத்தி தொடர்பில் உலக வங்கி பிரதிநிதிகளுடன் ஜனாதிபதி அநுர குமார திஸாநாயக்க ஆராய்ந்துள்ளார்.

உலக வங்கி குழுமத்தின் தெற்காசியப் பிராந்தியத்திற்கான உபதலைவர் ஜோஹன்னஸ் ஸட் உள்ளிட்ட உலக வங்கி குழும பிரதிநிதிகளுடன் நேற்றுப் பிற்பகல் ஜனாதிபதி அலுவலகத்தில் நடைபெற்ற கலந்துரையாடலில் ஜனாதிபதி கலந்து கொண்டார்.

இதில் இலங்கையின் தற்போதைய பொருளாதாரத் திட்டத்திற்கு உலக வங்கி தனது பாராட்டுகளைத் தெரிவித்ததுடன், டிஜிட்டல் மயமாக்கல், சுற்றுலா, விவசாயம் மற்றும் உட்கட்டமைப்பு உள்ளிட்ட குறுகிய காலத்தில் பயனடையக் கூடிய துறைகளை அடையாளம் கண்டு ஊக்குவிப்பது குறித்தும் வடக்கு, கிழக்கு அபிவிருத்தி குறித்தும் இதன் போது ஆராயப்பட்டது.

மேலும் இலங்கையின் தற்போதைய பொருளாதார ஸ்திரத்தன்மையைத் தொடர்ந்து பேணி, பொருளாதார வளர்ச்சியை அடைய அரசாங்கம் நடவடிக்கை எடுத்து வருவதாகவும் இலங்கையில் ஏற்பட்டுள்ள அரசியல், சமூக மற்றும் பொருளாதார முன்னேற்றத்தை உலகிற்கு எடுத்துச் செல்வதற்கு பங்களிக்க வேண்டும் என்றும் ஜனாதிபதி அநுர உலக வங்கிப் பிரதிநிதிகளிடம் கேட்டுக் கொண்டார். (ம-7)

வலம்புரி
விளம்பரத் தொடர்புகளுக்கு
076 636 3378,
076 097 3127

### மஹஜன சம்பத
திகதி 2025.09.15
சீட்டிழுப்பு இலக்கம் 5953
K 5 1 4 0 7 6

அத சம்பத
K 4 0 7 6
சீட்டிழுப்பு இலக்கம் 0528

### சுப தவசக்
திகதி 2025.09.15
சீட்டிழுப்பு இலக்கம் 0069
மேடம் 18 39 40 44

### தன நிதானய
திகதி - 2025.09.15
சீட்டிழுப்பு இலக்கம் - 1983
K 10 19 52 71 K

### மெகா பவர்
திகதி 15/09/2025
சீட்டிழுப்பு இலக்கம் 2301
P 11 32 41 55 80

### ஜய
திகதி 2025.09.15
சீட்டிழுப்பு இலக்கம் 0221
J 0 1 8 1

### கொவிசெத
சீட்டிழுப்பு இலக்கம் - 4195
சீட்டிழுப்பு திகதி 15.09.2025
Z 30 46 68 78
Z

### HANDAHANA
உத்தியோகபூர்வ முடிவுகள்
சீட்டிழுப்பு திகதி 2025.09.15
சீட்டிழுப்பு இலக்கம் 1262
இடபம் 10 27 48 61 இடபம்

### உத்தியோகபூர்வ முடிவுகள் — சுப்பிரி தன சம்பத
15.09.2025 வெற்றி வாரம் 0661
M 2 7 4 8 6 9
அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ.24,291,964.80

### SUPER BALL
சீட்டிழுப்பு வாரம் 2927
சீட்டிழுப்பு திகதி 2025.09.15 தினம் திங்கட்கிழமை
06 33 74 76 Z
அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ.59,895,197.60

### சனிதா
திகதி 15.09.2025 வெற்றி வாரம் 5088
06 27 45 80 L
அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ. 56,861,072.40

### ஜயோதா
திகதி 2025.09.15 வெற்றி வாரம் 2161
22 26 41 51 G
அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ. 31,650,248.80

### ராசி
சீட்டிழுப்பு வாரம் 4639
சீட்டிழுப்பு திகதி 15.09.2025 தினம் திங்கட்கிழமை
37 45 58 61
அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ.7,933,331.60

### கப்ருக
ஆங்கில எழுத்து, சுப்பர் இலக்கம் மற்றும் வெற்றி இலக்கம்
Y 01 29 38 40 65
2103 — 15.09.2025 திங்கட்கிழமை
அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ.594,112,825.40

### அத கோட்டிபதி
திங்கட்கிழமை
வெற்றி வாரம் : 2753
சீட்டிழுப்பு திகதி : 2025.09.15
அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ.51,008,289.60
19 41 46 54 L

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## வேலைக்கு ஆட்கள் தேவை

யாழ்ப்பாணத்தில் முன்னணியில் இயங்கிவரும் ஒப்பந்த நிறுவனம் ஒன்றுக்கு தொழில் நுட்ப உத்தியோகத்தர்கள் தேவை.
(Nct civil NVQ level 5 - 2 வருட அனுபவம் தேவை)
மேசன், கூலி வேலையாட்கள் தேவை.
சாப்பாடு, தங்குமிட வசதிகள் செய்து கொடுக்கப்படும்.
சம்பளம் நேரில் பேசித் தீர்மானிக்கப்படும்.
(C-3882)

தொடர்பு: 076 980 6787


## உடனடி வேலைவாய்ப்பு

நிர்வாக உத்தியோகத்தர்

விமான பயணச்சீட்டுக்கள் | விரைவு பொதிகள் சேவைகள் | விசா சேவைகள்

40 வயதிற்குட்பட்டோர் விண்ணப்பிக்கலாம் (ஆண்கள் விரும்பத்தக்கது)
வெளிமாவட்டங்களில் வேலை செய்ய விரும்புவோருக்கு முன்னுரிமை வழங்கப்படும் (தங்குமிடம் வழங்கப்படும்)
சம்பளம் 30,000/- 50,000/-

எமது நேரடி கிளைகள்: கொழும்பு, மட்டக்களப்பு, திருகோணமலை, கிளிநொச்சி, புதுக்குடியிருப்பு, கொடிகாமம், புத்தூர், சாவகச்சேரி, கோப்பாய், சுன்னாகம், யாழ்ப்பாணம், சங்கானை, பண்டத்தரிப்பு, மானிப்பாய், நெல்லியடி, பருத்தித்துறை, வல்வெட்டித்துறை
(C-3889)

V2 TRAVELS 076 1410725 076 8226236
v2vacancies@gmail.com



வங்கியில் அடகு வைத்த நகைகளை மீட்க முடியவில்லையா? நாம் மீட்டுத்தருகின்றோம்

## ஆகாஸ் நகை மாடம்

யாழ்ப்பாணம், நெல்லியடி, பருத்தித்துறை, சாவகச்சேரி, கொடிகாமம், கிளிநொச்சி, மானிப்பாய், சுன்னாகம், அச்சுவேலி, சங்கானை, வல்வெட்டித்துறை, உடுப்பிட்டி, காரைநகர், வவுனியா, மன்னார் ஆகிய பகுதிகளில்

வங்கியில் அடகு வைக்கப்பட்ட அடகு நகைகளை நகைக்கேற்ப பெறுமதியைப் பார்த்து வங்கியிலேயே பணத்தைத் தந்து வாங்கப்படும். (C-3890)

076 825 7716 (ஆகாஸ்)


## மணப்பெண் தேவை

01. காரைநகர் - பருத்தித்துறை, இந்து, 1988, புனர்பூசம், Msc, UK Citizen மாப்பிள்ளைக்கு பெண் தேவை.
02. காரைநகர், இந்து, 1990, ஆயிலியம், Computer Science, UK Citizen Divorce மாப்பிள்ளைக்கு பெண் தேவை. (28386)
03. புங்குடுதீவு, இந்து, 1989, சுவாதி, Engineer, Canada Citizen மாப்பிள்ளைக்கு பெண் தேவை. (32178)
04. காரைநகர், இந்து, 1992, பூரட்டாதி, Civil Engineer, Australia Citizen மாப்பிள்ளைக்கு பெண் தேவை. (32827)
05. நெல்லியடி, இந்து, 1991, பூராடம், Graduate, USA Citizen Divorce மாப்பிள்ளைக்கு பெண் தேவை. (47452)
06. கொக்குவில் - இணுவில், இந்து, 1988, திருவோணம், Civil Engineer, Australia Citizen, Divorce மாப்பிள்ளைக்கு பெண் தேவை. (52796)
07. அளவெட்டி, இந்து, 1989, உத்திராடம், Msc in Engineering, UK Citizen மாப்பிள்ளைக்கு பெண் தேவை. (53552)
08. திருநெல்வேலி - சாவகச்சேரி, இந்து, 1992, கார்த்திகை, Bsc (Hons) in IT, UK Citizen மாப்பிள்ளைக்கு பெண் தேவை.
09. கோண்டாவில், இந்து, 1990, அத்தம், Graduate, UK மாப்பிள்ளைக்கு பெண் தேவை. (38579)
10. Jaffna Town, இந்து, 1991, கார்த்திகை, Masters of Accounting and finance, UK citizen மாப்பிள்ளைக்கு பெண் தேவை. (43419)

நீங்களாகவே எமது website www.thaalee.com இல் உங்களுக்குப் பொருத்தமானவர்களைத் தெரிவு செய்து கொள்ளலாம். (5420)

S.Sharma J.P 077 539 3728
www.thaalee.com


வலம்புரி
விளம்பரத் தொடர்புகளுக்கு
076 636 3378,
076 097 3127


## முகாமையாளர் தேவை

நல்லூர் துர்க்கா மணி மண்டபத்திற்கு பொருத்தமான முகாமையாளர் (ஆண்) ஒருவர் தேவைப்படுகிறார். ஓய்வு பெற்ற அரச சேவையாளராக இருப்பது விரும்பத்தக்கது. ஊதியம் பேசி தீர்மானிக்கப்படும். ஆர்வமுள்ளவர்கள் உங்கள் சுயவிபரங்களையும் தொலைபேசி இலக்கத்தையும் எமக்கு கடிதம் ஊடாக 27.09.2025 ற்கு முன்னர் எமக்கு கிடைக்குமாறு அனுப்பி வையுங்கள். கடித மேல் மூலையில் "முகாமையாளர் பதவி விண்ணப்பம்" என தலைப்பிடுங்கள். (5428)

"தலைவர், நிர்வாகசபை
ஸ்ரீ துர்க்காதேவி தேவஸ்தானம், தெல்லிப்பழை"

## காணி விற்பனைக்கு உண்டு

யாழ். கோப்பாய் இராசபாதை வீதியில் றெஜினிங் கொலிஜ்க்கு முன்பாக 22 பரப்புக் காணி இரண்டு பரப்பாகப் பிரித்து 20 அடிப் பாதையுடன் விற்பனைக்கு உண்டு குடியிருப்புச் சூழல், நல்ல நீர்க்கிணறு, செம்மண் தரைக் காணி.

பார்வையிடும் நேரம் :- காலை 6 மணிமுதல் மாலை 6 மணிவரை

பிரதான போக்குவரத்துச் சேவை
பஸ் செல்லும் வீதி முன்பாக
(5425)

தொடர்புகளுக்கு : விமல் 076 755 8606
074 338 4481 / 077 638 5683

# மரண அறிவித்தல்



## நடேசு திவாகரன்

நெடுந்தீவு 11ஆம் வட்டாரத்தைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட நடேசு திவாகரன் அவர்கள் கடந்த (14.09.2025) ஞாயிற்றுக்கிழமை காலமானார்.

அன்னார் நடேசு - யோகலெட்சுமி தம்பதியினரின் பாசமிகு மகனும் வினோஜனா அவர்களின் பாசமிகு கணவரும் மயூரன், செந்தூரன், திலீபன், ஜீவிதா ஆகியோரின் அன்புச் சகோதரனும் தியாகராசா - ஜமுனாராணி தம்பதியரின் அன்பு மருமகனும் காலஞ்சென்ற தர்மலிங்கம் கனகாம்பிகை, விஜயரத்தினம் கமலாட்சி ஆகியோரின் அன்புப் பேரனும் சுபாசினி, சிந்துஜா, அஜந்தா, சசிகரன் ஆகியோரின் அன்பு மைத்துனரும் தக்ஷ்மி, அகர்வின், தகர்வின், காலஞ்சென்ற செந்தாஜினி மற்றும் செந்தாருஷன், செந்தாஜிதன், செந்தாரகன், அனநியா, அர்வின் ஆகியோரின் சிறிய தந்தையாரும் கியாஷன், சாதுரியா ஆகியோரின் பாசமிகு மாமனாரும் காலஞ்சென்ற தட்ஷணாமூர்த்தி - பாலாம்பிகை தம்பதியரின் அன்பு மருமகனும் நற்குணசிங்கம், சூரியகுமார், காலஞ்சென்ற கிருபாகரன் மற்றும் கெங்காகரன், விஜயலெட்சுமி, விஜயகௌரி, மலர்விழி, ஓங்காரலிங்கம், காலஞ்சென்ற சந்திரலிங்கம், திருஞானம் ஆகியோரின் பெறாமகனும் அம்பிகைபாகன் - யூடிற்றா தம்பதியரின் அன்பு மருமகனுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை 17.09.2025 புதன்கிழமை காலை 8.00 மணியளவில் அன்னாரின் இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக நெடுந்தீவு கிழக்குக் கட்டறான் சல்லி இந்து மயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும்.

இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

11ம் வட்டாரம்,
நெடுந்தீவு. (C-3883)

தகவல் : குடும்பத்தினர்
077 022 2295, 077 992 5635

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இப்பத்திரிகை வலம்புரி நியூஸ் பேப்பர் (பிறைவேற்) லிமிட்டெட் ஸ்தாபனத்தாரால் இல.191, பிறவுண் றோட், யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 16.09.2025 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.